Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, MARCH 5, 2021

சனிக்கிழமை மார்ச் 05, 2022 | ஒளி: 07 கதிர், 248 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free

## கோட்டாவின் கோபமான 'கோல்'



அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதன் பின்னர், விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்ட குழுவினர், அமைச்சர் வாசுதேவ நாணயக்காரருடன் இணைந்து, கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில், நேற்று (04) ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினர்.

தொடர்ச்சி P2



# "இனவாதம் கக்கியோருடன் கூட்டணி இல்லை"

### தன்னிடம் உறுதியாக சஜித் தெரிவித்ததாக கூறுகின்றார் மனோ

வரலாறு முழுக்க தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக இனவாதம் கக்கிய முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளடங்கிய குழுவினருடன் கூட்டணி அமைக்கமாட்டோம் என்பதில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உறுதியாக இருக்கின்றார். இதுதொடர்பில் என்னிடம் உறுதியாக தெரிவித்துள்ளார் என தமிழ் முற்போக்கு கூட்டணி, ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார். விமல், கம்மன்பில வெளியேற்றப்பட்டதைப் போல, இன்னமும் பலர் வெளியேற்றப்பட உள்ளனர்.

தொடர்ச்சி P2



## "பசில் ஒரு கறுப்பு ஆடு"

தனியொரு நபரினால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச, பசில் ராஜபக்‌ஷ என்றொரு கறுப்பு ஆட்டினால், எம்மை நீக்கியமையால் நாட்டுக்கு டொலர் கிடைத்துவிடுமா? அல்லது எரிபொருள் ஊற்றெடுக்குமா? மின்சாரப் பிரச்சினைகள் இல்லாது போகுமா? அல்லது பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா? ஒன்றுமே நடக்காது. ஏனெனில், அரசாங்கத்துக்குள் ஒரு கறுப்பு ஆடு இருக்கிறது.

இந்த ஜனாதிபதியின் கீழ், இனிமேல் எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## "நிலவை காட்டிய விரலுக்கு வெட்டு"

இருட்டுக்குள் இருக்கும் நிலவை யாராவது கேட்டால், அதனை கைவிரலை நீட்டிதான் காண்பிக்க வேண்டும். அரசாங்கத்தில் இருக்கும் சிலர், நிலவைப் பார்க்காது காண்பித்த கைவிரலை வெட்டிவிடுகின்றனர் என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியதன் பின்னர், கொழும்பில் நேற்று (04) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## "போகவும் மாட்டேன்; விலகவும் மாட்டேன்"

எனது பதவியை நான் இராஜினாமா செய்யவும் மாட்டேன்; அமைச்சரவைக் கூட்டத்துக்குச் செல்லவும் மாட்டேன். அத்துடன் எனது அமைச்சின் பொறுப்புகளையும் கடமைகளையும் முறையாக செய்யவும் மாட்டேன் என்று முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அமைச்சுப் பதிவியிலிருந்து நேற்று முன்தினம் நீக்கப்பட்டதை அடுத்து கொழும்பில் நேற்று (04) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## எச்சரிக்கை



வங்காள விரிகுடாவின் தென்கிழக்கு கடற்பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தால் கடலுக்குச் செல்லும் போது அவதானமாக இருக்குமாறு மீனவர்களுக்கும் கடல்சார் தொழிலாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## எந்தவொரு தடுப்பூசியையும்




7 இலட்சம் பேர் பெறவில்லை

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்கான தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் மூன்றாம் கட்டத்தை அடைந்துள்ளன.

தொடர்ச்சி P2



## சந்திப்பு

இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் ஜூலி சுங், பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவை அலரிமாளிகையில் வைத்து நேற்று (04) சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

## இரு கட்டணங்களை அதிகரிக்க பரிந்துரை



ஏற்பட்டிருக்கும் பொருளாதார நிலைமைக்கு மத்தியில் எரிபொருட்கள் மற்றும் மின்சார கட்டணங்களை உடனடியாக அதிகரிக்குமாறு அரசாங்கத்துக்கு மீண்டுமொரு தடவை இலங்கை மத்திய வங்கி பரிந்துரை செய்துள்ளது.

தொடர்ச்சி P2

### பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக

## மலையகத்தில் கையெழுத்து வேட்டை

பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நாளைய தினம் (சனிக்கிழமை) மாத்தளை, கண்டி ஆகிய மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

### கொவிட் தொற்றால் மரணிப்போரை

## சகல மயானங்களிலும் அடக்கம் செய்யலாம்



கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக மரணிப்போரின் சடலங்களை, சகல மயானங்களிலும் அடக்கம் செய்வதற்கான அனுமதியை சுகாதார அமைச்சு வழங்கியுள்ளது. இந்த நடைமுறை இன்று (05) முதல் அமல்படுத்தப்படும் என அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### அமைச்சர், இராஜாங்க அமைச்சர்களாக

## இவ்விருவர் பதவிப்பிரமாணம்

அமைச்சுகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்திற்கிணங்க, அமைச்சர், இராஜாங்க அமைச்சர்களாக இவ்விருவர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, முன்னிலையில் நேற்று (04) பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். சி.பி. ரத்நாயக்க வனவளப் பாதுகாப்பு அமைச்சராகவும் திலும் அமுனுகம போக்குவரத்து அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

தொடர்ச்சி P2





## பின்வாங்கினார் நிமல் சிறிபால டி சில்வா

விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சர் பதவிகளில் இருந்து நீக்கியதன் பின்னர், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களும் தாம் வகிக்கும் அமைச்சர் பதவிகளில் இருந்து விலக வேண்டுமென, சுதந்திரக் கட்சிக்குள் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனினும், தான் வகிக்கும் அமைச்சர் பதவியிலிருந்து விலக மாட்டேன் என தொழில்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துவிட்டார்.

தொடர்ச்சி P2

## யுகதனவிக்கு எதிரான மனுக்கள் விசாரணையின்றி தள்ளுபடி

பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த யுகதனவி மின் உற்பத்தி நிலைய ஒப்பந்தத்துக்கு எதிரான மனுக்கள் யாவும், விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமலேயே தள்ளுபடி செய்யப்பட்டன. இந்த மனுக்கள் யாவும் உயர்நீதிமன்றத்தால் நேற்று (04) தள்ளுபடி செய்யப்பட்டன.

தொடர்ச்சி P2

## இன்றும் நாளையும் மின்வெட்டு

இன்று (05) சனிக்கிழமை, எட்டுவலையங்களில், 3 மணிநேரமும் (காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரையிலும்) மாலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரையில் 1 மணிநேரமும் மின்வெட்டு அமல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# மக்களுடன் உடைந்து விழுந்த மரப்பாலம்

பெரும் எண்ணிக்கையிலான மக்கள் அந்தப் பாலத்தில் பயணம் செய்துகொண்டிருந்த போது, மரப்பாலம் உடைந்து விழுந்துள்ளது. மாத்தறை, பரேவி துவா விஹாரையுடன், கரைக்கு இணைக்கப்பட்ட பாலமே இவ்வாறு உடைந்து விழுந்துள்ளது. விஹாரைக்குச் சென்றிருந்த மக்கள் திரும்பும் போதே, மரப்பாலம் உடைந்து கடலுக்குள் விழுந்துள்ளது. எனினும், இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாரிய காயங்கள் ஏற்படவில்லை எனவும், உடைந்த பாலம் முறிந்து விழாமல், கடலை தொட்டுக்கொண்டிப்பதால், பாரிய அனர்த்தங்கள் எவையும் ஏற்படவில்லை என்றும் அறியமுடிகின்றது.



PAGE 1 தொடர்ச்சிகள்

# 'இனவாதம் கக்கியோருடன்...

வரலாறு முழுக்க தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக இனவாதம் கக்கிய முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளடங்கிய குழுவினருடன் கூட்டணி அமைக்கமாட்டோம் என்பதில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உறுதியாக இருக்கின்றார். இதுதொடர்பில் தன்னிடம் உறுதியாக தெரிவித்துள்ளார என தமிழ் முற்போக்கு கூட்டணி, ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார். அரசாங்கம் ஆட்டம் விமல், கம்மன்பில வெளியேற்றப்பட்டதைப் போல, இன்னமும் பலர் வெளியேற்றப்பட உள்ளனர்.

இந்நிலையில் வழமைபோல் புதிய கூட்டணிகள். புதிய நகர்வுகள் நிகழ்கின்றன. இந்நிலையில், தேர்தலுக்கு, முன்னரோ, பின்னரோ இனவாதிகளை எம்முடன் இணைத்துக்கொள்ள மாட்டேன் என்பதில், சஜித் பிரேமதாச உறுதியாக இருக்கின்றார் என்றும் மனோ கணேசன் தெரிவித்தார்.

விமல், உதய இரத்தின தேர இலங்கை அரசியலில் இனவாத பிதாமைந்தர்கள். இவ்வாறானவர்களுக்கு அனுதாபம் இல்லை. நாட்டில் ராஜபக்ஷர்கள் மீது பெரும் வெறுப்பு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது என்றும் மனோ கணேசன் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்ஷர்கள், இனவாதத்தையும், மத அடிப்படைவாதத்தையும் தூண்டி விட்டே ஆட்சியை பிடித்தார்கள். அந்த விடயத்தை பொறுப்பேற்று தேர்தல் காலத்திலும், அதற்கு முன்னரும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, ரத்தினதேரர் ஆகியோரே கொண்டு நடத்தினர் என்றார்.

தமிழ்-முஸ்லிம் எதிர்ப்பு, இந்து-இஸ்லாம்-கத்தோலிக்க எதிர்ப்பு என்ற இன, மத அடிப்படைவாதங்களை இலங்கையில் ஸ்தாபனரீதியாக முன்னின்று நடத்தியவர்கள் இவர்கள் மூவரும்தான். அதை வரலாறு அறியும். இந்த நிமிடம்வரைக்கூட திருந்தாதவர்கள். இனவாத வினை விதைத்தார்கள். இன்று ஊழ்வினை வினை அறுக்கிறார்கள். "அறு தம்பி, அறு.., நன்றாக அறு..!" என நாம் சுற்றி நின்று வேடிக்கை பார்க்கத்தான் வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோட்டாவின்...

அந்த சந்திப்பின் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து தனக்கு வந்த தொலைபேசி அழைப்புத் தொடர்பில் விவரித்தார்.

அன்றொருநாள் பகல் 2.01க்கு ஜனாதிபதி எனக்கு அழைப்பொன்றை எடுத்தார். நான், ஒவ் (ஆம்) ஜனாதிபதித்துமனி என்றேன். அன்று எனது வீட்டில் முக்கியமான கூட்டமொன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. அதாவது, ஆசிரியர் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கான குழுவின் கூட்டமாகும். அதில், அமைச்சர்களான மஹிந்த அமரவீர, டலஸ் அழகபெரும ஆகியோர் இருந்தனர்.

அழைப்பு எடுத்த ஜனாதிபதி, என்ன நீங்கள் நாட்டை மூடுமாறு கூறுகின்றீர்கள் என ஏதேதோ... (பிளா, பிளா, பிளா...) எனக் கூறிக்கொண்டே போனார். பதவியை இராஜினாமா செய்வதற்கான கடிதத்தை அனுப்புமாறு கோரினார். நான், ஸ்தூத்தி (நன்றி) ஜனாதிபதித்துமனி என்றேன்.

அன்றையதினம் ஜனாதிபதியிடம் இரண்டே வார்த்தைகள்தான் பேசினேன். ஒவ் (ஆம்) ஜனாதிபதித்துமனி, ஸ்தூத்தி (நன்றி) ஜனாதிபதித்துமனி

அதற்குப்பின்னர் உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்காரருக்கும் ஜனாதிபதி, அழைப்பை எடுத்திருந்தார். எனினும், இராஜினாமா கடிதத்தை கோரவில்லை, நாட்டை முடக்க சொல்வது தொடர்பில் எங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் கடிந்துகொண்டுள்ளார் என விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கேள்விப்பட்டு எனக்கு அழைப்பை எடுத்திருந்தார்.

நான் சொன்னேன், "இராஜினாமா கடிதத்தை எழுதிக்கொண்டிருக்கின்றேன்" என்று, ஒவ்வொருவர் கூறுவதைப்போல செயற்படவேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் உள்ளேயும் வெளியேயும் விமர்சனங்களை முன்வைக்கலாம். அதற்கான சுதந்திரம் இருந்தது. கேட்டுக்கொள்வார். நடவடிக்கை எடுக்கவேண்டிய விடயங்களுக்கு நடவடிக்கை எடுப்பார். ஒதுக்கிவைக்கவேண்டியதை அப்படியே விட்டுவிடுவார். அதுதான் அரசியல் ஞானமாகும் என்றார் விமல் வீரவன்ச.

அந்தக் காலப்பகுதியில் கொரோனா தொற்று வேகமாக பரவிக்கொண்டிருந்தது. அதன் காரணமாக, இரண்டொரு வாரங்களுக்கு நாட்டை முற்றாக முடக்குமாறு நாங்கள் கோரியிருந்தோம். கடிதங்களையும் அனுப்பியிருந்தோம். எனினும், சுமார் ஒரு மாதத்துக்கு மேலாக நாடு மூடப்பட்டிருந்தது என்றும் விமல் வீரவன்ச நினைவூட்டினார்.

# 'பசில் ஒரு கருப்பு ஆடு'

அமைச்சுப் பதிவியிலிருந்து நேற்று முன்தினம் நீக்கப்பட்டதை அடுத்து கொழும்பில் நேற்று (04) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரும் முன்னர் இருந்தே, எமது தரப்புக்குள் கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. ஏனெனில் பசில் ராஜபக்ஷ இந்நாட்டின் ஜனாதிபதியாக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்.

எனினும், மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷதான் ஜனாதிபதியாகத் தகுதியானவர் எனக் கருதி நாம் செயற்பட்டோம். இது, பசில் ராஜபக்ஷவின் கனவுக்கு தடையாக அமைந்தது என்றார்.

# 'நிலவை காட்டிய விரலுக்கு வெட்டு'

நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்துகொண்டு செல்கிறது என்பதை பலமுறை எடுத்துரைத்தோம். அரசாங்கத்துக்கு உள்ளிருந்தே நாங்கள் குரல்கொடுத்தோம். எனினும், எவரும் செவிசாய்க்கவில்லை. இன்றை நிலைமையை பார்க்குமிடத்து, அவ்வரசாங்கத்துக்குள் தொடர்ந்தும் இருப்பது உசித்தமானதாக அமையாது எனத் தீர்மானித்து அரசாங்கத்தை விட்டு வெளியேறினோம் என்றார்.

# போகவும் மாட்டேன் விலகவும் மாட்டேன்

நாடு செல்லும் பாதை தவறானது என்பதைப் புரிந்துகொண்டோம். அதற்காக உள்ளே இருந்தே குரல் கொடுத்தோம். யாரும் செவிசாய்ப்பதாய் இல்லை. அதனால்தான் வெளியில் இறங்கி குரல்கொடுத்தோம். அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. எனினும், உள்ளே இருப்பவர்களுக்கு அது விளங்கவில்லை. அதனால்தான் பதவிகளைப் பறித்தனர் என்றார். என்னுடைய பதவியை ஏன்? பறிக்கவில்லை என்பது தொடர்பில் எனக்குத் தெரியாது. எனினும், நான் இராஜினாமா செய்துகொள்ளப் போவதாக கதைகள் அடிபட்டுள்ளன. நான், இராஜினாமா செய்யமாட்டேன். அதேபோல, அமைச்சுக்கும் செல்லமாட்டேன். அமைச்சரவைக் கூட்டத்துக்கும் செல்லமாட்டேன் என்றார்.

# எச்சரிக்கை

மன்னாரிலிருந்து காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஊடாக ஹம்பாந்தோட்டை வரையில் கடற்றொழிலில் ஈடுபட வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தால் நாட்டின் வடக்கு, வடகிழக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்கு கடற்பிராந்தியங்களில் சீரற்ற வானிலை நிலவுமென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடற்பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 60 முதல் 70 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடுமென எச்சரித்துள்ள வளிமண்டலவியல் திணைக்களம், கடல் கொந்தளிப்பாக இருக்குமெனவும் எச்சரித்துள்ளது.

வடக்கு மாகாணத்திலும் திருகோணமலை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் 100 மில்லிமீட்டர் வரை மழை பெய்யலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

வடமத்திய, மத்திய, ஊவா மாகாணங்களிலும் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் 50 மில்லிமீட்டர் வரை மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# இரு கட்டணங்களை அதிகரிக்க பரிந்துரை

அத்துடன் கடன் அட்டைகள் மீதான வரியை 20 சதவீதமாக அதிகரிப்பதற்கும் மத்திய வங்கி நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

நிலையான வைப்பு வசதி சதவீதம் மற்றும் நிலையான கடன் வசதி சதவீதத்தை அதிகரிக்கவும் மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. அதனடிப்படையில் கடன்வசதி தலா 100 புள்ளிகள் வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நிலையான வைப்பு வசதி 6.5 சதவீதம் வரையிலும், நிலையான கடன் வசதி 7.5 சதவீதம் வரையிலும் அதிகரிக்கப்பட்டுள்ளது என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

## மலையகத்தில் கையெழுத்து வேட்டை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இந்த விடயத்தினை உறுதிப்படுத்தியுள்ளார்.

இதற்கமைய இன்று (05) காலை 9 மணிக்கு மாத்தளையில் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு கண்டியிலும் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்குவதற்கான கையெழுத்துப் போராட்டம் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இது வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டிருந்ததோடு, கிழக்கு மாகாணத்திலும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

## எந்தவொரு தடுப்பூசியையும்

பூஸ்டர் ஏற்றும் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு கொண்டிருக்கின்றன எனத் தெரிவித்த பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில், 72 பேர், அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதிதீவிர சிகிச்சை பிரிவில் மேலும் 81 தொற்றாளர்களுக்கான கட்டில்கள் மாத்திரமே காணப்படுகின்றன எனத் தெரிவித்த அவர், கொரோனா நோயாளிகளுக்காக வைத்தியசாலைகளில் 13,599 கட்டில்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 4,299 கட்டில்கள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

169 இலட்சம் பேர் முதலாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர். மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 72 இலட்சத்தை தாண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 6,48,410 ஆக பதிவாகியுள்ளது. இதுவரையிலும், 16, 287 பேர் உயிரிழந்துள்ளனர்.06,09,485 பேர் தொற்றிலிருந்து பூரண குணமடைந்துள்ளனர். இதற்கமைய, 22,638 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என புள்ளிவிவரத் தவல்கள் தெரிவிக்கின்றன.

## பின்வாங்கினார் நிமல் சிறிபாலடி சில்வா

அமைச்சர் பதவிகளை வகிப்பதா? அல்லது இல்லையா? என்பது தொடர்பிலான உத்தியோகபூர்வ பேச்சுவார்தை கட்சிக்குள் இதுவரையிலும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் அறியமுடிகின்றது.

அண்மையில் நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றிய கட்சியின் பொதுச் செயலாளர், மத்திய குழுவினால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு தருணத்திலும் சகல பதவிகளையும் கைவிட்டு, அரசாங்கத்தில் இருந்து விலகுவதற்கு தான் தயார் என்றார்.

## யுகதனவிக்கு எதிரான மனுக்கள்...

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, எல்.டி.பீ தெஹிதெனிய, புவனெக அலுவிஹாரே, விஜித் மலல்கொட மற்றும் பிரியந்த ஜயவர்தன ஆகிய நீதியரசர்கள் குழாமினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மற்றும் எல்லே குணவங்ச தேரர், பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார, மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுனில் ஹந்துன்நெத்தி, வசந்த சமரசிங்க, தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட தரப்பினரால் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அமைச்சர்களான உதய கம்மன்பில, விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் இந்த மனுக்களுக்கு சார்பாக, ஆட்சேபனைகளை உயர்நீதிமன்றத்தில் முன்வைத்திருந்தனர்.

## இன்றும் நாளையும் மின்வெட்டு

இதேவேளை, இரண்டு வலையங்களில், காலை 8.30 மணிமுதல் 4.30 மணிவரையிலும் 4 மணிநேரமும், மாலை 4.30 மணிமுதல் இரவு 10.30 மணிவரையில் 3 மணிநேரமும் மின்வெட்டு அமுல்படுத்தப்படும். ஞாயிறுக்கிழமை (06) காலை 9 மணிமுதல் மாலை 4.30 மணிவரையில் இரண்டு மணிநேரம் 30 நிமிடங்கள் மூன்று வலையங்களில் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என்றும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# சகல மயானங்களிலும் அடக்கம் செய்யலாம்

கொரோனா வைரஸ் தொற்றினால் மரணிப்போரின் சடலங்கள், எவ்விதமான வயது வித்தியாசங்களும் இன்றி, எரியூட்டப்பட்டன. அதன்பின்னர், கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதை அடுத்து, கொரோனா தொற்றினால் உயிரிழப்போரின் உடல்களை மட்டக்களப்பு  ஓட்டமாவடியில் மாத்திரமே அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அதற்காக பெரும் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. மயானம் தேடுவதிலும் பெரும் சிரமங்கள் ஏற்பட்டிருந்தன. ஓட்டமாவடியில் காணி ஒதுக்கப்பட்டதன் பின்னர், எவ்விதமான பேதங்களுமின்றி, ஜனாஸாக்களும் சடலங்களும் புதைக்கப்பட்டன.

# இவ்விருவர் பதவிப்பிரமாணம்

தென்னை, கித்துள் மற்றும் பனை செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த பொறிமுறை பண்டங்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சராக பதவிவகித்து தன்னுடைய பதவியை இராஜினாமா செய்த அருந்திக பெர்னாண்டோ , மீண்டும் அதே இராஜாங்க அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

அவர்களுக்கு மேலதிகமாக, அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சராக விமலவீர திஸாநாயக்க பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

பெப்ரவரி 01ஆம் திகதி இரவு ராகமை மருத்துவ பீட விடுதி வளாகத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் தென்னை அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வாகனத்தை பயன்படுத்தியதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதை அடுத்து, நீதியான விசாரணைக்கு வழிவிடும் வகையில், அருந்திக்க பெர்னாண்டோ, தனது இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


திலும் அமுனுகம - போக்குவரத்து அமைச்சர்


விமலவீர திஸாநாயக்க - அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்


அருந்திக பெர்னாண்டோ - தென்னை, கித்துள் மற்றும் பனை செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த பொறிமுறை பண்டங்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

# பயங்கரவாத தடுப்பு சட்டமும் கையெழுத்து வேட்டையும்





அ. அச்சுதன்

நாட்டில் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்று பல வருடங்களாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. ஐ. நா மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு தீர்மானங்களிலும் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்க காலத்தில், பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு மாற்றீடாக புதிய சட்டமூலத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இந்த விடயம், தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கும் சர்வதேச சமூகத்தினருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இன்றுவரை பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மாறாக, அந்தச் சட்டத்தை மேலும் பலப்படுத்துவதற்கான ஆணைகள், வர்த்தமானி பிரகடனம் ஊடாக விடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், இலங்கையில் கடந்த கால அரசாங்கங்கள், சர்வதேச போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்கும் செயற்றிறன் மிக்க நிலைமாறு கால நீதிப் பொறிமுறையை முன்னெடுப்பதற்கும் தவறியிருக்கின்றன.

தற்போதைய அரசாங்கம், ஐ. நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திலிருந்து விலகி, இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையில், தற்போதுவரை பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் முன்னெடுக்க எந்தவொரு செயற்றிட்டத்தையும் முன்வைக்கவில்லை என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட் அறிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில், இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் நிலைவரம் தொடர்பான உயர்ஸ்தானிகர் மிச்சேல் பச்லெட்டின் 17 பக்க அறிக்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

உண்மையிலேயே யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில், அவசரகால சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் ஆகியவற்றின் கீழ் தமிழ் இளைஞர், யுவதிகள் வகைதொகையின்றி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்; சித்திரைவதைகளுக்கும் உட்படுத்தப்பட்டனர்.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர், சர்வதேசத்தின் அழுத்தங்கள் காரணமாக, அவசரகால சட்டம் நீக்கப்பட்டிருந்தது. ஆனாலும், பயங்கரவாத தடைச் சட்டமானது, தொடர்ந்தும் நீடித்து வந்தது. இந்தச் சட்டத்தின் மூலம், அரசியல் ரீதியாகவும் பழிவாங்கல்கள் இடம்பெற்று வருவதாகவும் குற்றம் சாட்டப்படுகின்றது.




யுத்தகாலத்தின் போதும் இறுதி யுத்தத்தின் போதும், கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் இன்னமும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழேயே சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அந்த சட்டத்தின் கீழேயே இவர்களுக்கு எதிராக வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதனால்தான் இன்னமும் அரசியல் கைதிகளின் விவகாரத்துக்கு தீர்வு காணமுடியாத நிலைமையும் நீடித்து வருகின்றது.

இவ்வாறான நிலையில், தமிழரசுக் கட்சியின் வடக்கு, கிழக்கு வாலிபர் முன்னணி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, நாடு பூராகவும் கையெழுத்து வேட்டையையும் கவனஈர்ப்புப் போராட்டத்தையும் முன்னெடுத்து வருகின்றது.

இதற்கிணங்க, திருகோணமலையில் உள்ள தந்தை செல்வா சிலைக்கு அருகாமையில் சனிக்கிழமை (26.02) மாலை கையெழுத்துப் போராட்டம் இடம் பெற்றது. தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தியதன் பின்னர் ஆரம்பமான இவ் நிகழ்வானது முக்கியம் பெறுகின்றது.

இதில், இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், இரா. சாணக்கியன், த. கலையரசன் மற்றும் உள்ளூர் அரசியல்வாதிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு, பயங்கரவாத சட்டத்தை ஒழிக்க வேண்டும் எனக் கோரி கையெழுத்தை இட்டார்கள்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கருத்துரைக்கையில், “இக்கொடூரமான பயங்கரவாத சட்டத்தை ஒழிக்கக்கோரி, தமிழர்கள் மட்டுமல்ல ஏனைய சமூகத்தவரும் இதற்காகப் பங்களிப்பு செய்கின்றனர். நீர்கொழும்பில், மிகப் பிரமாண்டமாக கையெழுத்து போராட்டம் இடம்பெற்றது” என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் இங்கு கருத்துரைக்கையில், “பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒழிக்க கையெழுத்துப் போராட்டம் மட்டுமல்லாது, ஏதோ ஒரு வகையிலும் போராடிக் கொண்டே இருப்போம். இதற்காக முஸ்லிம் சமூகம் உட்பட, மற்றைய சமூகமும் குரல் கொடுத்து வருகின்றன” என்றார்.

மட்டக்களப்பு, காந்தி பூங்கா முன்பாகவும் ஞாயிற்றுக்கிழமை (27-02) இப் போராட்டம் இடம்பெற்றது. இதில் தமிழ், முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டனர்.

இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குமாறு முன்னெடுக்கப்பட்டு வரும் இப்போராட்டத்துக்கு, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய சமாதான கூட்டமைப்பு, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஆகிய முஸ்லிம் அரசியல் கட்சிகளும் இலங்கை ஆசிரியர் சங்கம், கிழக்கிலங்கை இந்து குருமார் ஒன்றியம் உட்பட பல்வேறு பொது அமைப்புகளும் ஆதரவு வழங்கி வருகின்றன.

மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை கையெழுத்துப் போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இதன் போது திருகோணமலையில் ஊடக அறிக்கையொன்றையும் வெளியிட்டுருந்தனர். இதில், ‘1979ஆ ம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாத தடுப்புச் சட்டமே (தற்காலிக) எமது சட்டப் புத்தகங்களில் காணப்படும் மிகக் கொடூரமான சட்டமாக தற்போது காணப்படுகிறது. 1979ஆம் ஆண்டு தற்காலிக சட்டமாக நிறைவேற்றப்பட்ட இச் சட்டம், அதன் தலைப்பில் தெரிவிப்பது போல (தற்காலிக ஆறு மாத காலத்துக்கு மட்டும் செல்லுபடியாக வேண்டியது. ஆனால், 42 வருட காலங்கள் நீடித்து, அநீதியை விளைவித்தும் அநேகருக்கு துன்பத்தையும் கஸ்டங்களையுமே வழங்கியுள்ளது.

இந்தச் சட்டத்தின் விதிகள், குற்றவியல் சட்டத்தின் அடிப்படை மூலாதாரங்களுக்கு எதிரான திசையில் இயங்குகின்றன. உண்மையில், விசாரணை நிலுவையில் உள்ள குற்றம் சாட்டப்பட்ட ஒருவர், குற்றமற்றவர் என்ற அனுமானமும் கூட எமது சட்டம், காவல் துறையினரிடம் வழங்கப்படும் எந்த வாக்கு மூலத்தையும் கண்டு கொள்வதில்லை. இது நீதிமன்றத்தில் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படாது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் மாத்திரமே, ஓர் உதவிக் காவல் அத்தியட்சகர் பதவிக்கு குறையாத ஒரு காவல்துறை அதிகாரியிடம் வழங்கப்படும் வாக்கு மூலம், குற்ற ஒப்புதலாக ஏற்று கொள்ளப்படும். இந்த விதி மட்டுமே, பல தவறான தீர்ப்புகளுக்கு வழிவகுத்தது மட்டுமல்லாது.

ஒப்புதல் வாக்கு மூலங்கள், தடுப்புக் காவல் மற்றும் பிணை இல்லாமல் காவலில் வைப்பதற்கான விதிகள் ஆகியவை காவல்துறை சித்திரவதை நிகழ்வுகளை அதிகரிக்கச் செய்துள்ளன’ எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.



உக்ரேன் அகதிகள்:

# அவர்கள் எங்கு செல்லக்கூடும்?

## நடைமுறைகள் என்ன?

**உக்ரேனில் இருந்து 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வெளியேறியுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை கூறுகிறது. ரஷ்யப் படையெடுப்பின் காரணமாக 40 இலட்சம் பேர் நாட்டை விட்டு வெளியேற முயற்சி செய்யக்கூடும் என ஐரோப்பிய ஒன்றியம் மதிப்பிட்டுள்ளது.**



ஐரோப்பிய ஒன்றியம், அகதிகள் மீதான தனது விதிகளை தளர்த்தியுள்ளது. மற்றும், தனது உறுப்பு நாடுகள் அகதிகளை ‘திறந்த கரங்களுடன்’ வரவேற்பதாகவும் கூறியுள்ளது.

### உக்ரேனின் அகதிகள், போலந்து, ருமேனியா, ஸ்லோவாக்கியா, ஹங்கேரி, மோல்தோவா போன்ற மேற்கில் உள்ள அண்டை நாடுகளுக்கு எல்லைகளைக் கடந்து, தப்பிச் செல்கின்றனர்.

போலந்து சில நாள்களுக்கு முன்பு வரை, இரண்டு இலட்சத்து 80 ஆயிரம் அகதிகளை ஏற்றுக்கொண்டுள்ளது என்று ஐ.நா கூறுகிறது. ஒவ்வொரு நாளும் மேலும் 50,000 பேர் வருவதாக போலந்து அரசாங்கம் தெரிவிக்கிறது.

காயமடைந்த உக்ரேனியர்களை அழைத்துச் செல்வதற்கு போலந்து, ஒரு மருத்துவ ரயிலையும் தயார்படுத்தி வருகிறது. மேலும், அவர்களுக்கு சிகிச்சை அளிக்க 1,230 மருத்துவமனைகளின் பட்டியலையும் தயாரித்துள்ளது.

சமீபத்திய ஆண்டுகளில் குறிப்பாக 2014 இல் ரஷ்யா, கிரைமியாவை தன்னுடன் இணைத்ததிலிருந்து, பத்து இலட்சத்துக்கும் அதிகமான உக்ரேனியர்கள் போலந்தில் குடியேறியுள்ளனர்.

மற்றைய நாடுகளைப் பொறுத்தவரை, ஞாயிற்றுக்கிழமை (27) மாலை வரையிலான ஐ.நா வெளியிட்ட நிலைவரத்தில், ஹங்கேரி - 71,158, ருமேனியா - 43,184, மோல்தோவா - 41,525, ஸ்லோவாக்கியா - 17,648; இப்போது ஒரு நாளைக்கு 10,000 அகதிகளை தான் ஏற்றுக்கொள்வதாக ஸ்லோவாக்கியா கூறுகிறது.

அண்டை நாடுகளுக்கு அகதிகள் செல்வதற்கு ஆவணங்கள் தேவையில்லை என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், அவர்களின் உள்நாட்டு, வெளிநாட்டு பயணக் கடவுச்சீட்டுகள், அவர்களுடன் பயணிக்கும் குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ்கள், மருத்துவ ஆவணங்களை கைவசம் வைத்திருப்பது நல்லது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகதி என்று அழைக்கப்பட, அவர்கள் உக்ரேனிய குடிமக்களாக இருக்க வேண்டும்; அல்லது, வெளிநாட்டு மாணவர்கள் போல, உக்ரேனில் சட்டபூர்வமாக வசிப்பவர்களாக இருக்க வேண்டும்.

ஆயினும், சில எல்லை சோதனைச்சாவடிகளில், சுமார் 15 கிலோ மீற்றர் நீளமான வரிசைகளில் பல நாள்களாகக் காத்திருக்கின்றனர். மேலும், பலரால் உக்ரேனிய நகரங்களுக்கு வெளியே செல்லும் ரயில்களில் ஏற முடியவில்லை.

உக்ரேனின் எல்லையில் உள்ள போலந்து மற்றும் பிற நாடுகளில், தங்குவதற்கு நண்பர்கள் அல்லது உறவினர்கள் இல்லாவிட்டால், அகதிகள் வரவேற்பு மையங்களில் தங்கலாம். அங்கு அவர்களுக்கு உணவு மற்றும் மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஹங்கேரி மற்றும் ருமேனியாவில், அகதிகளுக்கு உணவு மற்றும் உடைக்கான பண உதவித்தொகை வழங்கப்படுகிறது. உள்ளூர் பள்ளிகளில் குழந்தைகளுக்கு இடம் வழங்கப்படுகிறது.

அகதிகள் வரவேற்பு மையங்களில் எவ்வளவு காலம் செலவிடலாம் என்பதற்கான கால வரம்புகளை நாடுகள் வைத்திருந்தன. ஆனால், பெரும்பாலான நாடுகள் அவற்றை தள்ளுபடி செய்யக்கூடும் என்றும் உக்ரேனியர்கள் தேவைப்படும் காலம் வரை அவற்றில் தங்கலாம் என்றும் கூறுப்படுகிறது.

இடம்பெயர்வு அலையை சமாளிக்க செக் குடியரசு, தயார்நிலை திட்டத்தை செயற்படுத்தியுள்ளது. அகதிகள் தேவைப்பட்டால் தங்குவதற்கு, எளிய நடைமுறை மூலம் சிறப்பு வகை விசாவுக்கு விண்ணப்பிக்க இந்தத் திட்டம் உதவும்.

### அகதிகளுக்காக பிரிட்டன் என்ன செய்கிறது?

உக்ரேனியர்களுக்கு பிரிட்டன் குடிமக்கள் உறவினர்களாக இருந்தால், அவர்கள் பிரிட்டன் வரலாம் என அந்த நாடு தெரிவித்துள்ளது. கீயவில் உள்ள செயலாக்க மையம் மூடப்பட்டுள்ளது. ஆனால், மேற்கு நகரமான ‘லிவிவ்’ இல் உள்ள அலுவலகம் செயற்படுகிறது. மேலும் அருகிலுள்ள நாடுகளில் இருந்தும் மக்கள் விண்ணப்பிக்கலாம்.

பிரிட்டிஷ் விசாவைப் பெறக்கூடிய குடும்ப உறுப்பினர்கள்:

- மனைவி அல்லது சிவில் கூட்டாளி.
- குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் உடனிருக்கும் திருமணமாகாத கூட்டாளி.
- 18 வயதுக்குட்பட்ட குழந்தைகள்
- பேரக்குழந்தை 18 வயதுக்கு உட்பட்டவராக இருந்தால் பெற்றோரில் ஒருவர்
- பராமரிப்பாளர்களாக இருக்கும் வயது வந்த உறவினர்கள்.

உக்ரேனில் இப்போது குறைந்தபட்சம் ஒரு 1,60,000 பேர், போர் காரணமாக தங்கள் சொந்த நாட்டுக்குள் இடம்பெயர்ந்துள்ளனர் என்று ஐ.நா மதிப்பிட்டுள்ளது. இந்த எண்ணிக்கை 70 இலட்சமாக உயரக்கூடும் என்றும் 1 கோடியே 80 இலட்சம் உக்ரேனியர்கள் போரால் பாதிக்கப்படுவார்கள் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் கருதுகிறது.

“இவை மிகவும் தோராயமான மதிப்பீடுகள் என்றாலும், எண்ணிக்கை மிகப்பெரியவை. மேலும், இந்த வகையான அவசரநிலைக்கு நாம் தயாராக வேண்டும்” என்று மனிதாபிமான உதவி மற்றும் நெருக்கடி மேலாண்மைக்கான ஐரோப்பிய ஆணையாளர் ஜேனஸ் லெனார்சிச் கூறினார்.

### அகதிகளுக்கு என்ன உரிமைகள் உள்ளன?

போரிலிருந்து வெளியேறும் உக்ரேனியர்களுக்கு மூன்று ஆண்டுகள் வரை தனது 27 உறுப்பு நாடுகளில் தங்கி பணியாற்றுவதற்கான உரிமையை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் தயாராகி வருகிறது என்று ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரெஞ்சு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அவர்கள் சமூக நலன், வீட்டு வசதி, மருத்துவ சிகிச்சை, குழந்தைகளுக்கான பள்ளிப்படிப்பு ஆகியவற்றையும் பெறுவார்கள்.

1990களில் பால்கனில் நடந்த போருக்குப் பிறகு, வரையப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் அகதிகளுக்கான தற்காலிக பாதுகாப்பு அறிக்கைக்கு இணங்க இது அமைந்துள்ளது. ஆனால், இதுவரை அது பயன்படுத்தப்படவில்லை.

உக்ரேனியர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் தாங்கள் விரும்பும் இடத்தில் குடியேறுவதற்கு வசதியாக, அகதிகளுக்கான வழக்கமான விதிகள் நீக்கப்பட்டுள்ளன. (நன்றி: பிபிசி தமிழ்)

**அற்றோர்னி தத்துவ அதிகாரத்தை இரத்து செய்வதற்கான அறிவித்தல்**

ஐக்கிய இராச்சியம், BS8 3SF, பிரிஸ்டல், அபொட்ஸ் லீக், சான்டி லேன், வின்ட்ருஷ் என்ற இடத்தில் குடியிருக்கும் **அஜித் ஜயவிக்ரம அல்லது அஜித் ஜயபிரகாஷ் ஜயவிக்ரம** ஆகிய நான் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி கொழும்பில் பிரசித்த நொத்தாரிசு மானெல் சுவர்ணமாலி பர்னதெத் கலடுவாவ என்பவரால் எழுதி உறுதி செய்யப்பட்ட அற்றோர்னி தத்துவ பத்திர இல. 2152 என்ற அற்றோர்னி தத்துவ பத்திரம் மூலம் கடுவலை வெலிவிட்ட இல. 256/48 என்ற இடத்தில் குடியிருக்கும் **மோஸஸ் கிறிஷாந்த ஜோன்** என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோர்னி தத்துவ அதிகாரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் உடனடியாக ரத்துச்செய்கிறேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்கும் அதன் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் திகதி

**அஜித் ஜயவிக்ரம அல்லது**
**அஜித் ஜயபிரகாஷ் ஜயவிக்ரம**

சுருக்கு வலைகளால்

# சுரண்டப்படும் மீனவர்கள்

## வாழ்வாதாரம் பொய்த்துபோய் வாடிகளும் தூர்ந்தன




வ. சக்திவேல்
shagthivel@gmail.com

“நாம் கடலில் கரைவலை இட்டு மீன்பிடித்து வருகின்றோம். அண்மைக்காலமாக எமக்கு தொழில் இல்லாமல், வருமானமிழந்த நிலையில் வாழ்ந்து வருகின்றோம். இதனால், 200இற்கு மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் மத்தியில் உணவுத்தட்டுப்பாடு மாத்திரமின்றி, வருமானமிழந்த நிலைமையும் நிலவி வருகின்றது. இதற்கு முற்றுமுழுதான காரணம், அனுமதியற்ற முறையில் சுருக்குவலை பயன்படுத்தி, கடலிலுள்ள அனைத்து சிறியதும் நடுத்தர மீன்களை எல்லாம் பிடிப்பதுதான். இதைத் தடைசெய்யக்கோரி, நாம் அனைத்து உயர் அதிகாரிகளுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சருக்கும் படையினருக்கும் அறிவித்துள்ளோம். ஆனால், இதுவரையில் எந்தவித நடவடிக்கைகளும், எட்டப்படவில்லை” என்கிறார் கோட்டைக்கல்லாறு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ரி. சிவகுமார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோட்டைக்கல்லாறு, செட்டிபாளையம், தேத்தாத்தீவு, களுவாஞ்சிகுடி, களுதாவளை உள்ளிட்ட கடற்பிராந்தியங்களில், 20இற்கு மேற்பட்ட படகுகளில் வருபவர்கள், சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி நெத்தலி, கீரி, பாரை உள்ளிட்ட அனைத்து கடல் வளங்களையும் சுருக்கிக் கொண்டு சென்றுவிடுவதால் தாம் மிகவும் பாதிக்கப்படுவதாக இந்தப் பகுதி மீனவர்கள் ஆதங்கப்படுகின்றார்கள்.

தாம் பரம்பரை, பரம்பரையாக இதுவரை காலமும் இந்தக் கடலை நம்பி வாழ்ந்து வருவதாகவும் அண்மைக்காலமாக கடலில் தமக்கு மீன்கள் பிடிபடவில்லை எனவும் இதற்கு அனுமதியற்ற முறையில் சிலரால் சுருக்குவலை பயன்படுத்தி வருவதே ஒரே காரணமாகும் எனவும், எனவே இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திலெடுத்து, கடலில் அந்தச் சுருக்குவலைப் பயன்பாட்டை தடுத்து நிறுத்தி, அவ்வாறு சுருக்குவலை பயன்படுத்தி கடலில் மீன்பிடிப்பவர்களுக்கு எதிராக, சட்ட நடிவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி கடற்றொழிலாளர்கள் ஆதங்கப்படுகின்றனர்.

கோட்டைக்கல்லாறு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ரி. சிவகுமார் மேலும் கூறியதாவது: “நாளாந்தம் கரைவலை மீன்பிடியில் ஈடுபடும் நாம், வாழமுடியாதுள்ளது. இதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கையை மேற்கொண்டு தரவேண்டும். இதனால், எமது வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு, எமது பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், நாம் பரம்பரை பரம்பரையாக செய்து வந்த கரைவலை மீன் பிடியை விட்டுவிட்டு, ஏனைய கூலிவேலை, கட்டவேலை போன்றவற்றை நாடியாவது எமது குடும்பத்தை பாதுகாக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்” என்றார் கவலையுடன்!

‘உழைத்து வாழ வேண்டும்; பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே’ எனப் பாடல் வரிகளும் உண்டு. அதற்கு ஏற்றாற்போல் இவ்வுலகில் கடவுள் இயற்கையாகவே படைத்துள்ள வளங்களைப் பயன்படுத்தி, மனிதன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக முன்னேறிக் கொண்டுதான் வருக்கின்றான்.

ஆனாலும், பொருளாதாரத்திலும் செல்வாக்கிலும் உயர்நிலையில் உள்ள சிலர், கீழ் மட்ட உழைப்பாளிகளையும் மக்களையும், அவ்வப்போது சுரண்டுவதையும் பலவழிகளிலும் அவதானிக்க முடிகின்றது.





இவ்வாறான சுரண்டங்கல்கள் அல்லது தடைக்கற்களிலிருந்தும், தமது வாழ்வாதாரத்துக்காகப் போராடி வரும் மக்களுக்கு, உரிய துறைசார்ந்தவர்களும் சமூக ஆர்வலர்களும் அவர்களிலான ஒத்தாசைகளையும் உதவிகளையும், ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது, அவர்களின் தலையாய கடமையாகும் என கடற்றொழிலாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

அந்த வகையில் வங்கக் கடலும் வற்றாத வாவியான இலங்கையில் இரண்டாவது மிக நீளம் கொண்ட மட்டக்களப்பு வாவியும், இயற்கை வளங்களைத் தன்னகத்தே கொண்ட மட்டக்களப்பு மாவட்டம் விவசாயத்தையும் மீன்பிடியையும் பிரதான வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள், தமது சீவியத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனாலும், அவ்வாறு தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வரும் மக்கள் மத்தியில், தமது வாழ்வை முன்கொண்டு செல்வதற்கு பல சவால்கள், அவர்கள் முன்னே வந்து வந்து குவிகின்றன.

அந்த வகையில், கடல் வளத்தைத் தாம் அவ்வப்போது தொழில் ரீதியாக பயன்படுத்தி வந்த போதிலும், மிக அண்மைக்காலமாக தாம் அனுபவித்து வந்த கடல் வளத்தைப் பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்டம் கோட்டைக்கல்லாறு பகுதி கடலில் கரை வலை மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால், வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீனவர்கள், தமது மீன் வாடிகளை பயன்படுத்தாமல் தூர்ந்துபோய்விட்டன. நீண்டகாலம் கரையேற்றி தோணிகளை இன்னும் கடலில் இறக்கவில்லை. இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அப்பகுதி கரைவலை மீனர்கள் அங்கலாய்க்கின்றனர்.

இது இவ்வாறு அமைகின்ற போதிலும், அப்பகுதி கடற்பிராந்தியங்களில் கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதியற்ற வகையில், சிலரால் சுருக்கு வலை பயன்படுத்துவதைத் தடை செய்யக்கோரி, கடந்த காலங்களில் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

மக்களின் கருத்துகள் இவ்வாறு இருக்கின்ற இந்நிலைமையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் கடற் பகுதியில் பதுக்கி வைத்திருந்த பல சுருக்குவலைகளையும் அதன் எஞ்ஜின், படகுகள் உள்ளிட்டவற்றை, விசேட அதிரடிப்படையினரின் கடற்றொழில் திணைக்களத்தினர் கடந்த காலங்களில் மீட்டிருந்த சம்பவங்களும் உள்ளன.

கடற்றொழில் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் ருக்ஷன் குரூஸ் இதுகுறித்துத் தெரிவிக்கும்போது; “கடந்த வருடங்களில் எமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக, எமது பகுதி கடற் பிராந்தியங்களில் இடம்பெற்று வந்த சுருக்கு வலைகளைக் கைப்பற்றி, அதன் உரிமையாளர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இவ்வருடத்தில் எமக்கு எதுவித முறைப்பாடுகளும் கிடைப்பெறவில்லை. இருந்த போதிலும் வானிலை இடர்பாடுகளுக்கு மத்தியிலும் தமது நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளது” என்றார்.

எது எவ்வாறு அமைந்தாலும், கரைவலையில் நாளாந்தம் வலை பிடித்து இழுத்தால்தான் ஒவ்வொரு மீனவனின் வீட்டிலும் அடுப்பெரியும். இயற்கையாகக் கொண்ட கடலில், தொழில் செய்வதற்கு அனைவருக்கும் உரிமையிருந்தாலும், அனுமதியற்ற முறையில் மீன் பிடிப்பதையும் அனுமதியற்ற சுருக்கு வலைகளைப் பயன்படுத்துவதையும் தடுப்பதற்கு சம்மந்தப்பட்டவர்கள் தீர்க்கமான கட்டமைப்பு ஒன்றைக் அமல்படுத்த வேண்டும்.

ஆழ்கடல் மீன் பிடித் தொழிலை, கரைவலை மீன்பிடித் தொழிலோடு ஒப்பு நோக்க முடியாது. எனினும், ஒரு சிலர் மாத்திரம், கடல் வளத்தை அனுமதியற்ற முறையில் பயன்படுத்தி, இலாபமீட்டும் நிலைமையை உருவாக்கிக் கொள்வதையும் தடுத்து நிறுத்த வேண்டும்.

கடல் வளம் அனைவருக்குமானது என ஒரே பார்வையின் கீழ் கொண்டாலும், கரைவலை மீனவர்கள் பாதிப்புறா வண்ணம் அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, பெரியளவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களும் மனதிற்கொண்டு செயற்பட வேண்டும். இவைகளுக்கு பொறுப்பு வாய்ந்தவர்களும், தமது செய்பாடுகளை முடுக்கி விடவேண்டும் என்பதையே, இப்பகுதி கரைவலை மீனவர்களின் ஒரே எதிர்பார்ப்பாகும்.



# சேற்றில் புதையும் செந்தாமரைகள்

## கைகொடுத்துக் காப்பாற்றுவார் யார்?






சுப்பிரமணியம் பாஸ்கரன்

நாளைய உலகம் இன்றைய சிறார்களின் கைகளில் தங்கியுள்ளது. ஆனால், நவீன உலக ஓட்டத்தைப்புரிய முடியாமலும் தெரிந்து கொள்ள முடியாமலும் இருக்கும் இளம் சமுகம் ஒன்றை, சட்டவிரோத செயல்களுக்குள் தள்ளி அல்லது போதைப் பொருள் பாவனைகளுக்குள் தள்ளி, அவர்களது எதிர்காலத்தை பாழடிக்கின்ற வேலையை, இன்றைய மணல் மாபியாக்கள் செய்து வருகின்றனர் என்ற குற்றச்சாட்டை, பலரும் முன்வைத்து வருகின்றனர். இந்தக் குற்றச்சாட்டில் முழுமையாக உண்மை இருக்கின்றது என்பதை அண்மைய சம்பவங்கள் உணர்த்துகின்றன.

முழு உலகையும் அச்சுறுத்தி வரும் கொவிட் -19 அச்சுறுத்தல் காரணமாக, ஏற்பட்ட பல்வேறு பாதிப்புகளில் இதுவும் ஒன்றாக அடையாளப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

அதாவது, ஆரம்பத்தில் பாடசாலைகள் மூடப்பட்டமை காரணமாக, கிராமப் புறங்களிலும் பின்தங்கிய பகுதிகளிலும் சிறுவர் பாதிப்புளை எதிர் கொண்டனர். ஆனால், இங்குள்ள பிரச்சினைகளுக்கு இதனை முழுமையான காரணமாக எடுத்துக் கொள்ள முடியாது.

சிறுவர்கள் திட்டமிட்டு சீரழிக்கப்படுகின்றனர். அதாவது, எதிர்கால சமுதாயமொன்றை சீர்குலைக்கின்ற சமூகத்தை உருவாக்கி விடக்கூடாது என்பதை உணராதவர்களாக, இன்று பலர் செயற்பட்டு வருகின்றனர் என்பதை அண்மைய சம்பவங்கள் உணர்த்துகின்றன.

சட்டத்தால் அல்லது தண்டனைகளால் அல்லது துறைசார் அதிகாரிகளால் சிறுவர்களை அல்லது அவர்களது எதிர்காலத்தை பாதுகாக்க முடியாது, மாறாக அவர்களை சூழவுள்ளவர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூகத்தினரே முன்வர வேண்டும். இவ்வாறு சமூகத்தின் பங்குபற்றுதலின்றி அல்லது, விழிப்புணர்வின்றி சிறுவர்களையும் சமூகத்தையும் பாதுகாக்க முடியாது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 19 இடங்களில் சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெறுவதாக அடையாளப் படுத்தப்பட்டு இருக்கின்றன. இந்த இடங்களில், சட்டவிரோத மணல் அகழ்வுகளுக்கு அதிகளவு சிறுவர்களை பயன்படுத்தி வருகின்றனர். இது தொடர்பில், கிராம மட்ட அமைப்புகள், பொது அமைப்புகளால் பலதடவைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இந்த நிலையில், இங்கே இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டிய விடங்களாக உள்ளன. ஒன்று, சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படுகின்ற மணல் அகழ்வுகளுக்கு இவ்வாறான இளம் தலைமுறையை பயன்படுத்தி, அவர்களது எதிர்காலத்தை இருளில் தள்ளுவது.

இரண்டாவது, எதிர்கால இருப்பைக் கேள்விக் குறியாக்கும் வகையில், இயற்கையை அழித்து விடுவதுடன் மட்டுமல்லாது விவசாயம், வாழ்வாதாரம் அனைத்தையும் அழித்தல்.

கிளிநொச்சி மாவட்டத்தில், குறிப்பாக, சட்டவிரோத மணல் அகழ்வுகள் யாவும் வயல் நிலங்கள் நீர்பாசன கால்வாய்கள், ஆற்றுப் படுக்கைகள் என்பவற்றிலேயே மேற் கொள்ளப்படுகின்றன.

இதற்காக, சிறுவர் பலவழிகளில் பயன்படுத்தப்படுகின்றனர். அதாவது, வாகனங்களைச் செலுத்துவதற்கு, மணலை அகழ்வதற்கு, வாகனங்களுக்கு மணல் ஏற்றுவதற்கு எனத் தொழில்களை வழங்கி, குறைந்த வேதனங்களையும் கொடுத்து, அவர்களைப் போதைபொருளுக்கு அடிமைகளாக மாற்றி, இந்தச் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறுவர்களுடைய எதிர்காலத்தைப் பாழடிப்பதில் அல்லது அவர்களுடைய எதிர்காலத்தைச் சிதைக்கும் செயற்பாடுகளை, இந்தச் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அத்துடன், இதை யாரும் தடுக்கவும் முடியாது என்ற நிலையே இன்று தலைவிரித்தாடுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல தொழில் கல்வி நிலையங்கள் இருக்கிறன. அதாவது, ஜேர்மன் தொழில்நுட்ப கல்வி நிறுவகம், கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக்கல்லூரி என்பவற்றுடன் தொழிற் கல்வியை வழங்குவதற்கு மாவட்டத்தில் பல்வேறு வகையான கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. இத்தகைய கட்டமைப்புகளில் தொழிற் கல்வியை பெற்றுக்கொள்வதற்கு இங்கு யாரும் தயாராக இல்லை என்பது மிகவும் கவலைக்குரிய செல்நெறியாகும்.

ஆனால், கணிசமான அளவு ஆண்களும் அதிகமான பெண்களும் தொழில் கல்வியைப் பெற்றுக் கொள்கின்றனர். இவர்கள், வெளிமாவட்டங்களை சேர்ந்தவர்கள்; தென் பகுதிகளைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் இங்கே வந்து இந்த தொழிற்கல்வி நிறுவனங்களில் கல்வி கற்று வருகின்றனர்.

எங்களுடைய சமூகம், இன்று இந்தச் சட்டவிரோத செயற்பாடுகளை மேற்கொள்பவர்களால் சீரழிக்கப்படுகின்றது. இவ்வாறு, சிறுவர்கள் மீதும் அவர்களது எதிர்காலம் தொடர்பிலும் அக்கறை செலுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் அனைவரிடத்திலும் உள்ளது.



குமுக்கனில் காளிமஹாதேவிக்கு சண்டிஹோமம்:

# பெரும் காட்டுக்குள் பெரும் யாகம்



விபுலமாமணி
வி.ரி.
சகாதேவராஜா

கிழக்கு மாகாணத்தின் தென்கோடியிலுள்ள குமுக்கன் ஆற்றங்கரை தீரத்தில், அண்மையில் பிரதிஸ்டை செய்யப்பட்ட காளி மஹாதேவிக்கு வரலாறு காணாத, எட்டு மணிநேர மாபெரும் சண்டி ஹோம பெரும்யாகம் நிகழ்த்தப்பட்டுள்ளது.

பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே இலங்கையை ஆண்ட மன்னர்கள், காளிதேவியை துதித்து வழிபாடு செய்த இடமான 'காளிகா வனம்' என போற்றப்பட்ட குமுக்கன் ஆற்றங்கரையில் பெரும்யாகம் நடத்தப்பட்டது.

சித்தர்களின் குரல் அமையத்தின் உலகளாவிய தலைவர் ஸ்ரீ சிவசங்கர் ஜீயின் ஏற்பாட்டில், அடர்ந்த வனாந்தரத்தில் அமையப்பெற்ற 'காளிஅம்பாள்' சிலையின் முன்னால் இம்மாபெரும் யாகம் ஞாயிற்றுக்கிழமை (27) நிகழ்த்தப்பட்டது.

இதுவரை உலகில் எங்கும் நடந்திராத அளவுக்கு, பிரமாண்டமான சண்டிஹோமத்தை யாழ்ப்பாணம், இணுவில் தர்மசாஸ்தா குருகுல வேதவாத்தியார் சிவகாமசதுர்வேத சக்கரவர்த்தி மஹாதேவ சிவஸ்ரீ ஸ்ரீ வத்சாங்க குருக்கள் தலைமையிலான குருகுல அதிபர் சிவஸ்ரீ மஹாதேவ வாத்தியார், இணுவில்சாதக சிம்மம் சிவஸ்ரீ சிவபால சர்மா போன்ற வேத பண்டிதர்கள் நிகழ்த்தியமை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

சித்தர்களின்குரல் சமஸ்தான் ஆஸ்தான சிவாச்சாரியர் பிரபல வேதசாஸ்திர விற்பன்னர் ஸ்ரீ வத்சன் குருக்கள் தலைமையில், ஸ்ரீ சிவசங்கர் ஜீ முன்னிலையில் சித்தர்களின் குரல் அமைய தலைவர் ஆதித்தன், உபதலைவர் மனோகரன், சிவாயநம மகேஸ்வரன் ஜீ மற்றும் சித்தர் தொண்டர்கள் ஆகியோர் காலை ஒன்பது மணிமுதல் மாலை ஐந்து மணிவரை எட்டு மணிநேரம் தொடர்ச்சியாக யாகத்தை நிகழ்த்தினர்.

அசுரர்களை அழித்து, தர்மத்தைக் காக்க பல்வேறு வடிவங்களை எடுத்திருக்கும் ஆதிபரா சக்திதேவியின் வடிவம்தான் சண்டிமஹாதேவி. இங்கு யாகம் நடைபெற்ற அதேவேளை, சமகாலத்தில் காளிமஹாதேவிக்கு அபிஷேகமும் நடைபெற்றது.

அண்டசராசரத்தை ஒட்டுமொத்த இயக்கமாகக் கட்டுப்படுத்தும் 13 மாபெரும் சக்திகளை திருப்பதிப்படுத்திப் பூஜிப்பதற்காக, சண்டிஹோமத்தில் பஞ்சகவ்வியம், சந்தனாதிதைலம், பஞ்சாமிர்தம், மஞ்சள்தூள், நெய், கரும்பு, பன்னீர், தேன் உள்ளிட்ட 13 அபிஷேகத்திரவியங்கள் ஆகுதியாக்கப்பட்டன.

கலியுக நாதஸ்வர இசையுலக சக்கரவர்த்தி கோவிந்தசாமி இரட்ணகுமார் குழுவினரின் நாதஸ்வர மேளதாள வாத்தியம், அடர்ந்த கானகத்தை இசை மழையில் நனையவைத்தது. வெட்டி வேரில் உருவாக்கப்பட்ட 64 வகை உபசாரங்கள் அங்கு படைக்கப்பட்டன. கானகத்தில் இனிமையான வாசனை கமழ்ந்தது.

இறுதியாக வஸ்திரதானம் வழங்கப்பட்டதோடு, வனத்திலுள்ள அத்தனை தேவதைகளுக்கும் வனபோஜனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





### சண்டி ஹோமம் என்றால் என்ன?

அசுரர்களை அழித்து, தர்மத்தைக் காக்க, பல்வேறு வடிவங்களை எடுத்திருக்கும் ஆதி சக்தி தேவியின் வடிவம் தான் சண்டிதேவி. சண்டி ஹோமம் என்பது ஒரு சாதாரண ஹோமம் இல்லை. இது ஒரு மாபெரும் சக்தி மாற்றம். முறையாக ஒன்பது வேத விற்பன்னர்களை கொண்டு செய்யப்படுகின்ற இந்த ஹோமத்தில், மந்திரங்களைத் தொடர்ந்து கோஷமிட்டு சொல்ல வேண்டும்.

அப்படிச் சொல்லும் போது, ஒரு மாபெரும் சக்தி மாற்றம் இந்த பூமியில் இயல்பாக உண்டாகும். அந்த மண்ணே, ஒரு மாபெரும் சக்தி பீடமாக உருவாகும் எனச் சொல்கிறார் மார்க்கண்டேய மகரிஷி. இந்த மந்திரங்கள், 13 அத்தியாயங்களைக் கொண்டதாக இருக்கும். 13 அத்தியாயத்தில் வழிபாடு நிறைவு செய்யப்படும். 13 சக்திகளும் இணைந்த சக்திதான் மஹா சண்டிகா பரேமஸ்வரி. இந்த யாகங்கள் முறத்தினாலே (சுழகு) செய்யப்படும். மார்கண்டேயரால் சொல்லப்பட்ட 700 மந்திரங்களால் இந்த யாகம் நடைபெறும்.

மிக முக்கியமாக, சண்டி ஹோமத்தில் 13 தேவதைகளுக்கும் விருப்பமான இந்த 13 திரவியங்களே பிரதானமாக இடப்பட வேண்டும். அவற்றை இடுவதால் என்ன பலன்கள் கிடைக்கும் எனவும் சொல்லபடுகிறது. ஹோமம் நடைபெறும் போது, போடப்படும் திரவியங்களின் விவரமும் அதனால் கிடைக்கும் பலன்களும் நூலில் சொல்லப்பட்ட ஒழுங்கிலேயே தரப்பட்டுள்ளன.

(1) விளாம்பழம் (சத்ரு நாசம் மற்றும் நினைத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி)

(2) முழுத் தேங்காய் (அஷ்ட ஐஸ்வர்யங்களுடன் குபேர வாழ்வும் எடுத்த அனைத்து காரியங்களும் வெற்றியும் பதவி உயர்வும்)

(3) தாமரை பூ 10 துரிஞ்சி நாரத்தை (சந்ததி விருத்தியும் புத்திர விருத்தியும் வாழையடி வாழையாகத் தொடரும்)

(4) பாக்கு பழம் (அனைத்து விதமான நோய்களில் இருந்தும் விடுதலை)

(5) கொய்யாப் பழம் (வாக்குப் பலிதம், ஞானானந்தகரம் வித்தை, கலைகளில் விருத்தி என்பன ஏற்படும்)

(6) அகில் 10 சந்தன கட்டை (ராஜ வசீகரணம், சுய வசீகரணம், பேரழகு என்பன ஏற்படும்)

(7) நீத்துப் பூசணிக்காய் (எப்பேற்பட்ட திருஷ்டி தோஷங்களும் பில்லி, ஏவல் போன்ற கொடிய தாக்கங்களும் தவிடு பொடியாகும்)

(8) செங்கரும்பு (சர்வ வஸ்யம்)

(9) தேவதாரம் 10 கருங்காலி (சோகநாசம் மனதில் உள்ள சோகங்கள், சஞ்சலங்கள் தீரும்)

(10) மாம்பழம் (நினைத்த காரியம் ஜெயம்)

(11) மாதுளம்பழம் (மனதில் நினைக்கின்ற தூய பிரார்த்தனைகள் அனைத்தும் சித்தியாகும்)

(12) வில்வம்பழம் (அனைத்து விதமான பயங்களில் இருந்தும் விடுதலை, மன தைரியம் உண்டாகும்)

(13) செவ்வாழை (ஞான விருத்தி)

ஆதிபராசக்தியின் இந்த 13 சக்திகள்தான் அண்ட சராசரத்தின் ஒட்டுமொத்த இயக்கமாக உள்ளன. இந்தச் சக்திகளை திருப்திப்படுத்தி பூஜிப்பதே சண்டி ஹோமத்தின் ஒரே நோக்கம் ஆகும்.

(1) மஹாகாளி சண்டிகை: எமபயம், நோய் ஆகியன நீக்கி நீண்ட ஆயுள் அருள்பவள்.

(2) மஹாலக்ஷ்மி சண்டிகை: பொருளாதாரக் கஷ்டங்கள், கடன் தொல்லைகள் நீக்கி செல்வ வளம் அருள்பவள்.

(3) சங்கரி சண்டிகை: மனக்குழப்பங்கள், மன நோய்கள் அனைத்தையும் நீக்கி அமைதி அருள்பவள்.

(4) ஜெயதுர்க்கை சண்டிகை: தோல்விகளை நீக்கி, வெற்றி தருபவள்.

(5) மஹா சரஸ்வதி சண்டிகை: ஞாபக மறதி, அறியாமையை நீக்கி நல்லறிவு தருபவள்.

6) பத்மாவதி சண்டிகை: பயம் நீக்கி துணிவைத் தருபவள்.

(7) ராஜமாதங்கி சண்டிகை: பதவி உயர்வும் செழிப்பும் அருள்பவள் .

(8) பவானி சண்டிகை: சகல பாவங்களையும் நீக்குபவள்.

(9) அர்தாம்பிகை சண்டிகை: கணவன், மனைவிக்குள் ஒற்றுமையைத் தருபவள்.

(10) காமேஸ்வரி சண்டிகை: குழந்தை பாக்கியம் அருள்பவள்.

(11) புவனேஸ்வரி சண்டிகை: இயற்கை சீற்றங்களைப் போக்குபவள்.

(12) அக்னி துர்க்கை சண்டிகை: எதிரிகளால் ஏற்படும் துன்பங்களைத் தீர்ப்பவள்.

(13) சிவாதாரிகை சண்டிகை: பிறவா நிலையையும் முக்தியையும் அருள்பவள்.

64 உபசாரங்களுடனும் சமகாலத்தில் மூலமந்திர ஜெபம் 13 அத்தியாயங்களும் பாராயணம், ஹோமம், தர்ப்பணம், நியாசம், பிரமாண்டமாக அபிசேனம் என நடத்தப்பட்டமை, இலங்கையில் இதுவே முதல்முறை எனலாம். அதுவும் நடு காட்டுக்குள் இம்மாபெரும் யாகத்தை நடத்துவதென்பது சாமானியமான ஒன்றல்ல.

இந்தச் சண்டிஹோம யாகம், செய்ததன் புகழ் இப்பூமியில் 64 வருடங்கள் நிலைத்திருக்கும் என 'தேவிபாகவதம்' கூறுகிறது. இந்த யாகத்தால் அனைத்து மக்களும் பசிபட்டினி நீங்கி, நோயற்ற வாழ்வுடனும் குறைவற்ற செல்வத்துடனும் நீண்ட ஆயுளுடனும் ஆரோக்கியம் பெற்று வாழ்வார்கள் என்பது நம்பிக்கை.

அப்படிப்பட்ட மாபெரும் சண்டிஹோமம், இலங்கையில் நடைபெறுவது இதுவே முதல்முறையாகும் என ஸ்ரீ சிவசங்கர் ஜீ குறிப்பிடுகிறார். இக்ஹோமத்தால் நாடும் மக்களும் வளம்பெறவேண்டும்.




மரபணுக் குறைபாட்டால்

# மறைந்திருந்து தாக்கும்

## 'தலசீமியா' இரத்தச் சோகை நோய்



பைஷல்
இஸ்மாயில்



தலசீமியா என்பது, ஒருவகை இரத்தச்சோகை நோயாகும். உலகில் உயிரோடு பிறக்கின்ற பத்தாயிரம் குழந்தைகளில் 4.4 சதவீதமான குழந்தைகள், இந்த நோயோடுதான் பிறக்கின்றனர். அது மாத்திரமல்லாமல், உலகில் வாழுகின்ற மக்களில் சுமார் ஐந்து சதவீதமான மக்கள், இந்த நோயை உண்டுபண்ணும் மரபணு மாற்றங்களைக் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். இந்நோயோடு வாழுகின்ற 3,500 பேர் இப்போது எம்மத்தியில் இருக்கின்றனர். இதேபோல் இந்த நோயை உண்டாக்கக் கூடிய மரபணு உடையவர்கள் நோய்க் காவிகளாக கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் பேர் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் மத்திய, வடமத்திய, வடமேல் மாகாணங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர் என்று கூறுகின்றார், காத்தான்குடி ஆதார வைத்தியசாலை சிறுபிள்ளை வைத்திய நிபுணர் டொக்டர் பீ.எம். அர்ஷாத் அஹமட் MBBS, MD, PAED. தலசீமியா நோய் குறித்து அவர் கூறும் கருத்துகளை கேள்வி-பதில் வடிவத்தில் கீழே தருகின்றோம்.



டொக்டர் பீ.எம். அர்ஷாத் அஹமட்

**கேள்வி:** தலசீமியா நோய் குறித்து கூறமுடியுமா?

**பதில்:** உடலிலுள்ள குருதியில் சிவப்பணுக்கள் (RBC), வெள்ளையணுக்கள் (WBC), குருதிச் சிறுதட்டுக்கள் (PLATELETs) என்ற மூன்று வகை கலங்கள் காணப்படுகின்றன. இதில் நிறமுள்ள பதார்த்தமாக RBC இருப்பதாலேயே எமது குருதி இரத்தச் சிவப்பு நிறமாகத் தெரிகிறது.

தலசீமீயா என்பது இரத்த சிவப்பணுக்களோடு தொடர்புபட்ட ஒரு பரம்பரை நோயாகும். இந்த இரத்தச் சிவப்பணுக்கள், உரிய காலத்துக்கு முன்னர் தொடர்ந்து அழிவடைவதால் இந்நோய் ஏற்படுகிறது. இந்நோயில் பல படிநிலைகள் உள்ளன.

பெரும் தலசீமியா (thalassemia major) - இது மிக ஆபத்தான படிநிலையாகும். இந்நிலைக்கு உள்ளாகியவர்கள் கடுமையான இரத்தச் சோகைக்கு உள்ளாகி விடுவார்கள். அவர்கள் உயிர்வாழ்வதற்கு தொடர்ந்து இரத்தம் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படும்.

அறிகுறிகள் அற்ற மற்றும் சிறு தலசீமியா இரண்டுக்கும் இடைப்பட்ட, நிலைமாறும் இடைத்தலசீமியாவும் உள்ளன. இவைகள் ஆபத்து குறைவானவையாகும். எந்த வகை தலசீமியாவாக இருந்தாலும், அவை எல்லாமே மரபு வழிப்பட்ட இரத்தக் கோளாறுகள் மூலமே உருவாகின்றன.

அதாவது, பெற்றோரிடம் இருந்து பிள்ளைகளுக்கு மரபு வழியாகக் கடத்தப்படுவதன் மூலம் ஏற்படுகின்றது. குறிப்பாக, பெற்றோர் இருவருமே குறைபாடுள்ள மரபணு உடையவர்களாக இருப்பின், அவர்களின் குழந்தைகள் பெரும் தலசீமியா கொண்டவர்களாக இருப்பார்கள்.

இக்குறைபாடுடைய மரபணுவின் தோற்றம், மத்திய தரைக்கடல் பகுதி என்று வரலாற்று அடிப்படையில் நம்பப்படுகிறது. எனவேதான், தலசீமியா என்று பெயர் வந்தது. கிரேக்க மொழியில் 'தலஸ்' என்றால் கடலாகும். கடலே இல்லாத குருநாகல் பிரதேசத்தில், இந்தவகை நோயாளிகள் அதிகம் காணப்படுவதுபோல, இலங்கை உட்பட ஆசியா, மத்திய கிழக்கு, ஐரோப்பிய, ஆபிரிக்க நாடுகளிலும் இந்த நோய் பரவிக் காணப்படுகிறது.

ஒருவருக்கு RBC இல் உள்ள இரத்தப் புரதம் (ஹீமோகுளோபின் Hb) தேவையான அளவைவிடக் குறைவாக இருப்பதே இதற்குக் காரணமாகும். தலசீமியாவில் RBC அழிவுக்குக் காரணம் சிவப்பணுவின் (RBC) நிலைப்பாற்றலைத் தடுக்கும் ஒரு மரபுக்கோளாறாகும். இம்மரபுக் கோளாறு, மரபணுக்கள் மூலமாக பெற்றோரிடம் இருந்து குழந்தைக்கு கடத்தப்படுகிறது. பெற்றோர்களில் யாராவது ஒருவரிடம் இருந்து, குறைபாடுடைய இரத்தப் புரத மரபணுவையும் மற்றவரிடம் இருந்து இயல்பான மரபணுவையும் பெற்றுக்கொள்ளும் ஒருவர், பொதுவாக நோய் கடத்துபவர் (காவி) என்று அழைக்கப்படுகின்றார்.

நோய் கடத்துபவருக்கு மிதமான இரத்தச் சோகையைத் தவிர, வேறு எந்த அறிகுறியும் காணப்படுவதில்லை. அவருக்கு இரத்தம் பாய்ச்ச வேண்டிய தேவை வருவதில்லை. ஆனாலும், அவர் குறைபாடுள்ள மரபணுவைக் கொண்டு காவிக் கொண்டிருக்கிறார். இதனாலேயே அவர் 'காவி' என்று அழைக்கப்படுகிறார்.

**கேள்வி:** தலசீமியா மைனர் என்றால் என்ன?

**பதில்:** நோயைக் காவியாக இருக்கும் ஒரு நிலையை தலசீமியா நோய்க்குறிகள் அற்ற சிறு தலசீமியா என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய நோயாளிகளுக்கு ஒரு சில பிரச்சினைகளே இருக்கும். இவர்கள் இயல்பாக வாழ்க்கை நடத்துவார்கள். பெரும்பாலனவர்கள் இவ்வாறான ஒரு நோய் தமக்கு இருப்பது தெரியாமலேயே வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

மேலும், இடைத் தலசீமியா நோயாளிகள், பெரும் அல்லது சிறு தலசீமியா நோயாளிகளைப் போன்றோ அல்லது அதற்கு இடைப்பட்ட ஒரு தொங்கு நிலையிலோ இருப்பார்கள். பொதுவாக பெரும் தலசீமியா நோயாளிகளைப் போன்று, இவர்களுக்கு இரத்தச் சோகை கூடுதலாக இருக்காது. இருப்பினும் பலருக்கு சிலவேளைகளில் இரத்தம் கொடுக்க வேண்டியிருக்கும். இவர்களுக்கு உடலில் இரும்புச்சத்து அதிகமாகக் கூடிய அபாயம் இருப்பதால் மருந்துகள் கொடுத்து சிகிச்சையளிக்க வேண்டிய தேவை ஏற்படும்.

பெரும் தலசீமியா நோயாளிகளுக்கு இரத்தச் சோகையின் அறிகுறிகள், ஒருவயது வருவதற்கு முன்பே தென்படத்தொடங்கும். களைப்பு, சோர்வு, நிறம்வெளிருதல், மூச்சுத்திணறல், மூச்சுவிடுதலில் சிரமமும் கூடுதலான இதயத்துடிப்பும் இருக்கும். இந்நிலை கடுமையானால் மாரடைப்பும் ஏற்படலாம். அதாவது, இரத்தத்தில் ஒட்சிசனின் அளவு குறைவதே ஆகும்.

மேலும், பலவீனமான உருக்குலைந்த எலும்புகள், மண்ணீரலிலும் கல்லீரலிலும் வீக்கம், குறைவான உடல் வளர்ச்சி, காலம் கடந்து பருவமடைதல் போன்ற அறிகுறிகள் இருக்கும். குறிப்பாக, தொடர்ந்து இரத்தம் பாய்ச்சுவதால் இரும்புச்சத்து மிகையாகி, அதன் மூலம் பக்க விளைவுகளும் ஏற்படும்.

**கேள்வி:** தலசீமியாவை கண்டறிவது எவ்வாறு?

**பதில்:** தலசீமியாவைக் கண்டறிய சிறப்பு இரத்தப் பரிசோதனைகள் தேவைப்படும். சாதாரணமாக செய்யப்படும் இரத்தப் பரிசோதனைகளில் FBC யில் இரத்தச் சோகையின் அளவு Hb level, சிவப்பணு குறியீடுகள் MCV, RDW போன்றவற்றை வைத்து ஓரளவு அறிந்துகொள்ளலாம். மேலும், Blood picture போன்ற பரிசோதனைகள் மூலமும் தலசீமியா இருக்கிறதா, இல்லையா என்பதை ஓரளவு உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

பெற்றோர்களின் இரத்தப் பரிசோதனை அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டே, குழந்தைக்கு தலசீமியா இருக்கிறதா இல்லையா என்பதை மருத்துவரால் அறிந்துகொள்ள முடியும்.

**கேள்வி:** இதற்கான சிகிச்சை என்ன?

**பதில்:** இந்த நோயின் வகையையும் அதன் தீவிரத்தன்மையையும் பொறுத்தே சிகிச்சை செய்யப்படுகிறது. நோய் அறிகுறி இல்லாத தலசீமியா காவிகளுக்கு சிகிச்சை தேவையில்லை. ஆனால் அவர்கள் இன்னொரு தலசீமியா நோய்க்குறி இல்லாத காவிகளை திருமணம் செய்து கொண்டால் அவர்களுக்குப் பெரும் தலசீமியா கொண்ட குழந்தை பிறப்பதற்கான அபாயம் இருக்கிறது. காதல் திருமணமோ, பேச்சுத் திருமணமோ எதுவானாலும் இருவரும் தலசீமியா காவிகள் இல்லை என்பதை உறுதிப்படுத்துவது அவசியமாகும். யாராவது ஒருவர் காவியாக இருப்பதில் பிரச்சினை இல்லை. பெரும் தலசீமியா நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சையில், இரத்தப் புரதத்தை 10-12 g/dl வைத்திருக்க சிவப்பணுக்கள் செறிந்த இரத்த மாற்றத்தைத் தொடர்ந்து Blood transfusion செய்வது அவசியம். நோயின் கடுமை, மண்ணீரலின் அளவு, உடலேற்புத்தன்மை போன்ற பிற பல காரணிகளைப் பொறுத்தே இரத்தமாற்றத்தின் கால இடைவெளி நிர்ணயிக்கப்படுகிறது.

**கேள்வி:** இரத்த மாற்றம் இல்லாமல் வேறு சிகிச்சைகள் உண்டா?

**பதில்:** ஆம்! குறைபாடுள்ள இரத்த உற்பத்தி உயிரணுக்களை மாற்றி, அதற்குப் பதிலாக இன்னொருவரிடம் இருந்து ஆரோக்கியமான இரத்த உற்பத்தி உயிரணுக்கள் வைக்கப்படுகின்றன. இன்னொருவர் என்பவர் பொதுவாக HLA பொருத்தமுடைய (மாற்றத்துக்குத் தகுந்த மரபுப்பொருத்தம்) குறைபாடுடைய மரபணுக்கள் அற்ற சகோதரராக அல்லது சகோதரியாக இருக்க வேண்டும். உறவுமுறை அற்ற HLA பொருத்தம் கொண்ட BMT (எலும்பு மச்சை மாற்றம்) செய்யலாம். ஆனாலும், HLA பொருத்தம் கொண்ட உடன் பிறப்புகளிடம் இருந்து BMT மாற்றம் செய்வதே சிறப்பானது.

எலும்பு மச்சை மாற்றம் செய்து கொண்ட நோயாளிகளுக்கு அதற்குப்பின்னர், மேலும் இரத்தம் பாய்ச்ச வேண்டிய தேவை இருக்காது. அவர்கள் சாதாரண மனிதர்கள் போன்று உயிர்வாழலாம். குழந்தைப் பருவத்தில் உடலில் இரும்புசத்து அதிகரிப்பதற்கு முன்னர், இந்த சிகிச்சையை BMT செய்வதே சிறந்தது.

**கேள்வி:** இந்தநோய் வராமல் பாதுகாப்பதற்கான ஆலோசனை என்ன?

**பதில்:** இது முக்கியமான கேள்வியாகும். வருமுன் காப்பதே சிறந்தது. உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கோ தலசீமியா இருந்தால் திருமணம் செய்வதற்கு முதல், குடும்பத்தைப்பற்றி திட்டமிடுவதற்கு முன்னால் உங்கள் வைத்தியரோடு ஆலோசிப்பது மிகவும் அவசியமாகும்.

குறிப்பாக, தலசீமியா காவியாக இருப்பவர்கள் இன்னும் ஒரு தலசீமியா காவியை கரம்பற்றாமல் இருப்பது சாலச்சிறந்தது. குடும்பத்தில் அல்லது உறவினர்கள் மத்தியில் தலசீமியா நோய் இல்லாத ஏனையவர்கள் திருமணம் செய்வதற்கு முதல், பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் FBC பார்த்துக்கொள்வது நல்லது.

# சடலங்களைக் கொளுத்தி குளிர்காய்ந்த முட்டாள்தனமாக தீர்மானம்

அறிவியல் நிர்வாகம் செய்வதாக கூறிக்கொண்டு, ஆட்சிப்பீடமேறிய அரசாங்கத்தின் செயற்பாடுகளை நினைத்துப் பார்க்கையில், ஏன்? இந்தக் குரோதமான முடிவுகள் எனச் சிந்திக்கத் தோன்றுகின்றது. அந்தளவுக்கு சிறுபான்மை இனங்களின் மீதும் அவர்களின் மதங்களை நிந்திக்கும் வகையிலும், தீர்மானங்களை எடுத்து அதில் குளிர்காய்ந்து மகிழ்ந்துள்ளது.

அவ்வாறு குளிர்காய்ந்து மகிழ்வதற்காக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பல இருந்தாலும், கொரோனா தொற்றால் மரணமடைவோரின் சடலங்களை எரியூட்டவே வேண்டுமென, அறிவியல் ரீதியிலோ விஞ்ஞானபூர்வமாகவோ நிரூபிக்கமுடியாத தீர்மானத்தை எடுத்தது.

இந்தத் தீர்மானம் ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்தவர்களின் மனங்களிலும் இன்னுமே வடுவாக நிற்கின்றது. பிஞ்சுக் குழந்தைகள் முதல், பழுத்த தலைகள் வரையிலும் எவ்விதமான வயது வித்தியாசங்களும் இன்றி, எரியூட்டி மகிழ்ந்தது.

கொரோனா வைரஸ், எமது நாட்டை மட்டுமே தாக்கிக்கொண்டிருக்கும் ஒரு வைரஸ் அல்ல. உலக நாடுகளையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் வைரஸ்; கொரோனா வைரஸ் தொற்றி மரணமடையும் எவருமே வேறுநாடுகளில் எரியூட்டப்படவில்லை. தங்களுடைய இனவாத வெறுப்பைத் தக்கவைத்துக் கொள்ளும் வகையிலேயே சுற்றறிக்கைகளும் அறிவிப்புகள் விடுக்கப்பட்டு தீர்மானங்களும் எட்டப்பட்டன.

ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதற்காக அரசாங்கம்தான் அவ்வாறான முடிவுகளை எடுக்கின்றது என்றால், வழிநடத்துவோரில் ஒரு பிரிவான அதிகாரிகள், தலையை அசைத்துக்கொண்டிருக்கக் கூடாது. ஏனெனில், அதே அதிகாரிகள்தான், முன்னைய நிலைப்பாட்டை, தற்போது மாற்றியுள்ளனர்.

இதிலும் கூட, அதிகாரிகளின் யோசனைக்கு அமையவே இவ்வாறான தீர்மானங்களை எடுத்தோமெனக் கூறி அரசாங்கம் தப்பித்துக்கொள்ளும் என்பதில், ஒவ்வொருவரும் கவனமாக இருப்பார்களெனில், மனங்களை புண்படாமல் காப்பாற்றியிருக்கலாம்.

கொரோனா தொற்றில் மரணிப்போரை எரியூட்டவே வேண்டுமென்ற தீர்மானத்துக்கு கடுமையான எதிர்ப்புகள் கிளம்பின. இன்றும் கூட சர்வதேசத்துக்கு பதில்சொல்லவேண்டிய நிலைமையில் இவ்வரசாங்கம் நிற்கின்றது என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

இதனிடையே, தனியான இடமொன்றை தேர்வு செய்து, அங்கு இனம், மதம், மொழி, வேறு நாட்டை சேர்ந்தவர்கள் என பிரிவினை பார்க்காது, சகலருடைய சடலங்களும் புதைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில்தான், எந்தவொரு மயானத்திலும் கொரோனா சடலங்களை புதைக்கலாமென சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டிருக்கும் புதிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்றைய தீர்மானம், அரசியல் இருப்புக்காக எடுக்கப்பட்டது என்பது இன்றைய பின்வாங்கலில் இருந்து அம்பலமாகிறது. அரசியல் இருப்புக்காக மதங்களுடன் தொடர்புடைய விடயங்களை எந்தவோர் அரசாங்கமும் சீண்டிப்பார்க்கக் கூடாது. சில விடயங்களை விஞ்ஞான பூர்வமாகவும் அறிவியல் ரீதியிலும் தர்க்கித்து இறுதி முடிவை எடுக்கவேண்டும்.

எவ்விதமான மதச் சடங்குகளையும் செய்யாது, எரியூட்டப்பட்டுவிட்டது என்ற வேதனை ஒவ்வொருவரின் மனங்களிலும் ஆழமாய் பதிந்துவிட்டது என்பதை நினைவில் கொண்டு, அடுத்தடுத்து எடுக்கும் தீர்மானங்களையாவது, எவருடைய மனதும் புண்படாத வகையில் எடுக்கவேண்டும். அதற்கெல்லாம் காலம்தான் பதில்சொல்லும் என்பதை நினைவூட்டுகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# அமைச்சு மாற்றங்கள் தீர்வா?

லக்ஸ்மன்

நாட்டில் மின் துண்டிப்பு நேரம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அமைச்சர்கள் மாற்றப்படுகிறார்கள். எரிபொருள், சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு, பல்கலைக்கழகங்களை முழுமையாக ஆரம்பிக்க முடியாத நிலை, பொருட்களின் விலை கட்டுப்பாடற்று அதிகரித்தே செல்கிறது. இவ்வாறிருக்கையில், நாடு எங்கே செல்கிறது என்று மாத்திரம் கவலை கொள்வதால் பயன் ஏதும் உண்டா?

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான ஆயுதப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், அது நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணமாக சொல்லப்பட்டது. சிங்கள மக்கள் ஏமாற்றப்பட்டனர். ஆனால் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, 13 வருடங்கள் கடந்து விட்டன. நடந்திருக்கும் பயன் என்ன? “கறுப்புச் சந்தையில் டொலர் வாங்கி, கறுப்புச் சந்தையில் ஆயுதம் வாங்கி, கறுப்பாகவே யுத்தத்தை முடித்தோம்” என்று நிதியமைச்சர் கூறுகிறார். ஆனால், இப்போது நாட்டில் பிரச்சினைகளுக்கும் குறைவில்லாதுதான் இருக்கிறது.

2019 டிசெம்பர் மாதத்தில் ஆரம்பித்த கொவிட்-19 பெருந்தொற்றைத் தான் எல்லோரும் காரணமாகச் சொல்கிறார்கள். இது ஒன்றே இவ்வளவு பிரச்சினைகளுக்கும் காரணமாக இருந்தால், அமைச்சர்கள் மாற்றப்படத் தேவையில்லை. நாட்டில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியில் ஜனாதிபதி 2019 நவம்பர் மாதத்தில் தேர்வு செய்யப்பட்டதன் பின்னர் 2020இல் நாட்டின் ஆட்சியையும் அக்கட்சி கைப்பற்றிக் கொண்டது. அதன் பின்னர் வந்து கொண்டிருக்கும் பிரச்சினைகள் முடிவில்லாதவையாக மாறிவிட்டன.

இப்போது உருவாகியிருக்கும் பொருள்களின் தட்டுப்பாடோ, மின்துண்டிப்போ வடக்கு கிழக்கு மக்களுக்கு அனுபவமில்லாத விடயங்களல்ல. ஆனால், நாட்டின் அனைத்துப் பகுதிகளும் இப்போது இந்தப் பெருஞ்சிக்கலை அனுபவிக்கின்றன.

நாட்டின் வரலாற்றில் ராஜபக்ஷ குடும்பத்தின் வரலாறு, பொன் எழுத்துகளால் பொறிக்கப்படுமா இல்லையா என்பது, ஆட்சி நிறைவடையும் போதுதான் தெரியவரும். ஆனால், அதனை எவ்வாறு அவர்கள் சரிசெய்யப்போகிறார்கள் என்பது கேள்விக்குறிதான்.

பெரும்பான்மையின சிங்கள மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவானதாக பெருமைப்பட்டு, அநுராதபுர மகாபோதியில் பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்ட ஜனாதிபதி, இப்போது அப்பெரும்பான்மை மக்களாலேயே நிராகரிக்கப்படுகின்ற, வெறுக்கப்படுகின்ற நிலைமையை எட்டிவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.

அரசாங்கம் என்பது ஜனாதிபதி, அமைச்சரவை, பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கியதே. இவைகள் யாவும் உறுதியான அத்திவாரத்துடன் இருக்கின்ற ஆட்சியே சிறப்பானது என்று சொல்லப்படுகிறது. இலங்கையின் அமைச்சரவை காண்கின்ற ஆட்டத்தினைப் பார்க்கின்றபோது, இதில் சந்தேகமே ஏற்படுகிறது.

கூட்டுப் பொறுப்பென்பது அமைச்சரவைக்கான அடையாளமாகும். ஆனால, இப்போதைய அரசாங்கத்தில் கூட்டுப் பொறுப்பென்பது இம்மியளவும் இல்லை என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதற்குக் காரணம், அமைச்சரவைத் தீர்மானங்களை அமைச்சர்களே, எதிர்க்கட்சியினரைவிட மோசமாக விமர்சிக்கின்றமையாகும். இந்த விமர்சனங்களின் காரணமாக குழப்பங்கள் ஏற்பட்டு வருகிறது என்று கொண்டாலும் அது அமைச்சர்களுக்கு மாத்திரமோ, அரசாங்கத்துக்கு மாத்திரமோ பாதிப்பைக் கொண்டுவருவதில்லை. முழு நாட்டு மக்களையுமே பாதிப்படையச் செய்கிறது,

நாடு மறுசீரமைக்க முடியாத, மீளக் கட்டியெழுப்பமுடியாத அதள பாதாளத்துக்குள் சென்று கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்தாலும், எதையுமே செய்துவிட முடியாது என்பது உண்மையாகிக் கொண்டிருக்கிறது. இந்த இடத்தில்தான் எதிர்க்கட்சியினரும் ஐக்கிய தேசிய கட்சியும் கொடுக்கும் குடைச்சலை கவனிக்கவேண்டியிருக்கிறது. அந்தக் குடைச்சல்கள் சாதாரணமாக சமாளிக்கப்படுவதாகக் காண்பிக்கப்பட்டாலும் அது உண்மையல்ல என்பதும் எல்லோருக்கும் தெரிந்ததே.

ஆட்சியமைத்த இரண்டு வருட காலத்துக்குள் அமைச்சரவையில் நடந்த மாற்றங்களில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களாக விமல் வீரவன்ச, உதய கம்மம்பில போன்றவர்களையே கூறவேண்டும். ஆனால் அவர்களுக்கு நீதி கிடைப்பதற்காக, இப்போதே பதவி விலக வேண்டிய வாசுதேவ நாயக்கார போராடுகிறார்.

ஆட்சியமைப்பில் முக்கியமானவர்களாக பங்காளர்களாக இருந்தவர்களுக்கே பாதிப்பு ஏற்படுகிறது. கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சுசில் பிரேம ஜயந்த இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். அது நடைபெற்றபோதுகூட இது போன்ற எதிர்பார்ப்பு இருந்ததே தவிர, ஒன்றும் நடைபெற்றுவிடவில்லை.

ராஜபக்ஷ குடும்பத்தினரின் ஆட்சி சிறப்பாக நடைபெறுகிறது என்று சொல்வதற்காகவேனும் ஓர் ஆட்சியை நடத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன், அலாவுதீனின் அற்புத விளக்கோடு அதிசய பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்துவார் என்ற பெரும் எதிர்பார்ப்போடு நிதி அமைச்சராக பசில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டார். ஆனால் நடைபெற்றது ஒன்றுமில்லை. நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை நிதி அமைச்சரினால் கட்டுப்படுத்த முடியாத நிலைமைக்குச் சென்றுவிட்டது. அப்படியிருக்கையில் ஏனைய அமைச்சர்களிடமிருந்து பதவிகளைப் பறிப்பதும் மற்றொருவரை நியமிப்பதும் ஒரு சிறந்த நடவடிக்கையாக எப்படிப் பார்க்க முடியும் என்பதுதான் குழப்பம்.

மஹிந்த ராஜபக்ஷவினால் நிதி அமைச்சை திறம்பட நிர்வகிக்க முடியாமலிருப்பதாக பசில் ராஜபக்ஷவிடம் கொடுக்கப்பட்டது. பவித்திரா வன்னியாராச்சியால் சுகாதார அமைச்சினை திறம்பட நிர்வகிக்க முடியாதுள்ளது என்று கெஹலிய ரம்புவெலவிடம் கொடுக்கப்பட்டது. இதுபோன்றுதான் ஏனைய அமைச்சர்களும் இப்போதும் மாற்றப்பட்டிருக்கிறது.

அமைச்சினை சரியாக நிருவகிக்க முடியாதவர்கள் என்று கருதியவர்களுக்கே வேறு அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்பட்டன. மேலைநாடுகளின் அரசியல் பாரம்பரியங்களுக்கு இதனை எவ்வாறு உதாரணப்படுத்துவது.

இவ்வாறிருக்கையில், நிதிக் கொள்கை தோல்வி, மத்திய வங்கியின் நாணயக் கொள்கை திறம்படக் கையாளப்படவில்லை. நிதியமைச்சு தோல்வி, வெளிநாட்டு அமைச்சு மீதான விமர்சனங்கள் அதிகரித்திருக்கின்றன. நீதி அமைச்சு, விவசாயத்துறை, சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சு, கடற்றொழில் அமைச்சு, கலாசார அமைச்சு என்று பெரும் பட்டியலே இருக்கையில் நடைபெறும் மாற்றங்களால் மக்களைத் திருப்திப்படுத்துவதற்கா அரசு முயற்சி செய்கிறது என்றும் சந்தேகத்தைத் தோற்றுவிக்கின்றது.

இந்த நிலையில்தான், தற்போது நடைபெற ஆரம்பித்திருக்கின்ற ஜெனீவா மனித உரிமைகள் சபையின் அமர்வு, இலங்கைக்கு பிரளயங்களைக் கொண்டுவரவேண்டும் என்று எல்லோரும் எதிர்பார்க்கிறோம்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து அந்த அறிக்கை குறித்து இலங்கை அரசும் அறிக்கையை வழங்கியுள்ளது.

யுத்தக் குற்றம், காணாமல்போனோர் விவகாரம், பயங்கரவாதத் தடைச்சட்டம், மனித உரிமைகளின் நிலை என பல்வேறு விடயங்கள் மோதிக்கொண்டிருக்கின்றன. இந்த நிலையில்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் விடுத்துள்ள அறிக்கையில், நாட்டில் ஆட்சிக்கு வந்த எல்லா அரசாங்கங்களும் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்காக பேரினவாதத்தை ஆதரிக்கும் கொள்கைகளை முன்னிறுத்தி வந்துள்ளதாகவும் இந்த நிலைப்பாடு இலங்கைக்கு பாரிய பாதகங்களை கொண்டுவந்து என்றும் தெரிவித்துள்ளார். இது சாதாரணமானதோர் அறிக்கையாகப் பார்க்கப்படமுடியாதது.

இலங்கையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையிலான முரண்பாடு தொடங்கியது முதல் தமிழர்கள் விட்டுக்கொடுப்புகளுக்குத் தயாராக இருந்த போதிலும் அதனை ஏற்பதற்கு சிங்களவர்கள் தயாராக இருக்கவில்லை என்பதுடன் குழப்பங்களையும் பிரச்சினைகளையும் உருவாக்குபவர்களாகவே இருந்தார்கள். தமிழ் மக்களின் பிரச்சினையை, பிரித்தாளும் தந்திரங்கள், சலுகைகள் போன்றவற்றைக் கொண்டே கையாண்டிருக்கிறது.


இனத்துவேசத்தினை சிங்கள மக்களிடம் விதைப்பதன்மூலமே ஆட்சியாளர்கள் நாட்டின் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையின்மையைக் கையாண்டு வந்திருக்கிறார்கள். நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் என்ற போர்வையில் தமிழ் மக்களையே ஆசுவாசப்படுத்த முனைகின்ற செயற்பாடே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதே குற்றச்சாட்டு.

ஆனால், உண்மை நிலைமையினை சிங்கள பௌத்த மக்களுக்கு எடுத்துக்கூறினால் அவர்கள் நிலைமையினை புரிந்துகொள்வார்கள் எனவும், ஒரு சில சிங்கள தலைவர்களை விட ஏனையவர்களுக்கு இதனை செய்வதற்கு தைரியம் இல்லை என்று சம்பந்தன் தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறான நிலையில், கடந்த ஜெனீவா அமர்வு, ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வுகள், இலங்கை அரசாங்கத்தால் கையாளப்பட்டது போன்றே இவ்வருடத்திலும் கையாளப்படும் என்றுதான் அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது. இந்த நிலையில், இப்போது நாடு இருக்கின்ற நெருகக்கடியான நிலையில் இது எவ்வாறு சாத்தியம் என்பது முக்கியமான கேள்வி.

இவ்வாறான பலவிதமான முரண் நிலைகளுக்குள் இருக்கின்ற இலங்கை அரசாங்கமானது, முன்வைக்கின்ற அமைச்சரவை மாற்றம் என்கிற முயற்சியை எதற்கான முடிவாகப் பார்ப்பது என்பதுதான் விடைகாண முடியாததொன்று.

அதேநேரத்தில், ஜெனீவா மற்றும் ஐக்கிய நாடுகள் சபையில், காலங்கடத்தல்களை நிகழ்த்திக் கொண்டு, வெற்றி பெற்றதாக பெருமை அடித்துக் கொள்வதற்கு, எதற்கு அரசாங்கம் என்பதும் விடைதெரியாத கேள்வியே!



## வாழ்வியல் தரிசனம்

பெற்றோர்களில் சிலர், பிள்ளைகளை அடிமை நிலையில் வைத்திருக்கிறார்கள். பாசத்தைக் காட்டி, நியாயமான விருப்பங்களுக்கு வேட்டு வைக்கிறார்கள்.

திருமண விடயங்கள், விரும்பிய கல்வி போன்றவற்றில் தங்களின் முடிவுதான் சரியானதாகக் கருதிவிடுகின்றார்கள். மனம் ஒவ்வாத கல்வியைப் பிள்ளைகளிடம் திணித்துவிடுவதால், அவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும்.

பிள்ளைகள் படித்து நல்ல நிலைக்கு முன்னேறிய பின்னரும், அவர்களின் விருப்பப்படி வாழவிடாது, அவர்களைப் பாசத்தால் கட்டுப்போட்டு, விருப்பமில்லாத கல்யாணத்தைச் செய்துவைப்பது, இன்றைய நவீன உலகிலும் நடந்தவண்ணமே இருக்கின்றது.

எதை, எங்கே படிப்பது என்பது மாணவர்களின் விருப்பம், முடிவு சார்ந்தது. உலகில், கல்வி பலதுறைகளிலும் பாரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. மேலை நாடுகளில் பிள்ளைகள் சுயமாக உழைத்து, விரும்பிய துறைகளில் கற்கிறார்கள். பிள்ளைகளின் சுதந்திரம் பிரதானமானது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### குளத்து நீர் திறக்கப்பட்ட போதும்

## நிலத்தை பண்படுத்த முடியாத நிலை

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட முத்தையன் கட்டு குளத்தின் கீழ், சிறுபோக நெற்செய்கைக்காக நீர் திறந்துவிடப்பட்ட போதும், விதைப்பை மேற்கொள்வதற்காக நிலத்தைப் பண்படுத்துவதற்கு உழவு இயந்திரங்களுக்கு எரிபொருள் இல்லாமையால், நிலங்களைப் பண்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகின்ற நிலையில் மழையையும் பொருட்படுத்தாது விவசாயிகள், ஒட்டுசுட்டானில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளினை பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற முனைப்பில் ஈடுபட்டுள்ளார்கள்.

முத்தையன் கட்டுக்குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கை தொடங்கப்பட்டு, குளத்து நீர் திறந்துவிடப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர், முத்தையன் கட்டுக்குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளவேண்டும் என்ற நிலையில், டீசல் இல்லாமையால் உழவுசெய்யமுடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அதிகளவான விவசாயிகள் டீசல் இல்லாத நிலையில், நிலத்தைப் பண்படுத்தமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளார்கள்.

செ. கீதாஞ்சன்



## இருளடைந்த பாதைக்கு நாடகம் ஒளியூட்டும்;

# “கலை என் கண்ணீரை மாற்றியது”

### கடினமான வாழ்க்கையைக் கடந்து வந்தது குறித்து, மனம் திறக்கிறார் இயக்குநர் லிப்ஸியா

ஏ.எச்.ஏ. ஹுஸைன்
husseinmedia000@gmail.com



“நான் ஒரு நாடகம் அரங்கேற்றினேன். அந்தச் சந்தர்ப்பத்தில், ஒரு பிள்ளை எனது காலில் வந்து விழுந்து, கதறி அழுத காட்சி என் கண்களை விட்டகலவில்லை. அதுதான் என் துயர வாழ்க்கையயும் மாற்றியமைத்தது” என்று துயரம் கடந்து வந்த தனது வாழ்க்கைப் பாதையை மனம் திறக்கிறார் லிப்ஸியா மகேந்திரன்.

28 வயதான தொலை நோக்காளர் லிப்ஸியா, கொடூர யுத்தத்தின் காயங்களை வடுக்களாக்கி, மீண்டெழுந்து வந்ததோடு மட்டுமல்லாமல், அல்லலுற்ற அத்தனை பேருக்கும் துயர் துடைக்கும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார். அதனால் அவருக்கு, இந்தச் சிறுவயதில் படைப்பாற்றலுக்காகப் பல சர்வதேச விருதுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட ஆவணத் தொகுப்பிலும், லிப்ஸியா சமீபத்தில் இடம்பிடித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு இறுதி யுத்த கலவரத்தில், தனது தாயை இழந்து அகதிமுகாமின் அவல வாழ்க்கைக்குள் தள்ளப்பட்ட லிப்ஸியா, கடந்து வந்த பாதை கடினமானது.

அவர் கூறுகிறார்: “நான் ஒரு நாடகத்தைத் தயாரித்து, அதை முல்லைத்தீவில் அரங்கேற்றினேன். அப்பொழுது அந்த நாடகத்தில் வந்த கதாபாத்திரம் ஒன்று, தன்னைப்போலுள்ளது என்று கூறியவாறு என்னை நோக்கி, ஒரு பெண் ஓடிவந்தார். ‘இப்படியான சமூகத்தின் மத்தியில்தான் நான் வாழுகின்றேன். எனக்கு அம்மா, அப்பா, சகோதரங்கள் என எந்த உறவுகளும் இல்லை; தனிமையில்த்தான். அந்த வேளையில் என்னை துஷ்பிரயோகம் செய்து விட்டார்கள். என்னால் படிக்கவோ என் சுயத்தை வெளிப்படுத்தவோ முடியாமல் வாழுகின்றேன்’ என்று கூறியவாறு என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டு, தேம்பித் தேம்பி கதறி அழுதார்.

அந்த நிகழ்வு என்னை விழிப்படைய வைத்தது. நான் சுதாகரித்துக் கொண்டு எழுந்து, இன்னும் ஏதாவது இந்தச் சமூகத்துக்கு முன்மாதிரியாகச் செய்ய வேண்டும் என்று உறுதியெடுத்துக் கொண்டேன்.

நான் ஒரு முன்னுதாரணமாக இருந்து, எதையாவது சாதித்துக் காட்ட வேண்டும்; அதற்காகப் பயணிக்க வேண்டும். இந்தச் சமூகத்தை அதிலும் இலகுவில் பாதிக்கப்படக் கூடிய சிறுவர்கள், சிறுமிகள், பெண் பிள்ளைகள், ஆகிய தரப்பினரை விழிப்புணர்வூட்ட வேண்டும் என்ற உத்வேகத்தைக் கொடுத்தது. அதிகமான இடங்களில், இந்த விழிப்பூட்டலைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை என்னுள் உந்தித் தள்ளியது” என்கிறார் லிப்ஸியா.

இவர் தனது அம்மாவை 15 வயதில் இழந்துவிட்டார். அதன் பின்னர், அகதி முகாமில் வாழ வேண்டிய சூழல் இருந்தது.







அந்தக் கால கட்டம் குறித்து அவர் கூறுகிறார்: “நான் யாரையும் நெருங்க மாட்டேன்; பேச மாட்டேன். மனசு கனத்துப் போய் இருக்கும். கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபொழுதும், என்னுடைய மனசு நொறுங்கிப் போய்த்தான் இருந்தது. மனதின் அடி ஆழத்திலுள்ள கவலைகளை, யாரோடும் பகிர்ந்து கொள்வதில்லை; அதற்கான வாய்ப்புகளும் கிட்டவில்லை. மனக் கீறல்கள் என்னை எல்லா வழிகளிலும் தடுத்தன.

அடைபட்ட அகதி முகாம் வாழ்க்கையில், சிலவேளை உண்பதற்குக் கூட ஏதுவுமிருக்காது; மாற்று உடுப்பு இல்லை. ஒரேயோர் ஆடையையே தினமும் அணிந்திருக்கின்றேன். இவற்றிலிருந்து எப்படி மீண்டெழுவது என்ற கவலை, என்னை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது. மனசு துயரச் சுமைகளால் கனத்துப் போயிருந்ததால், கண்ணில் நித்திரையே இருந்ததில்லை. நொறுங்கிப்போன இந்த மனநிலையில் இருந்து கொண்டு, எப்படி நான் படித்து பரீட்சை எழுதப் போகின்றேன் என்று வருந்தினேன்.

ஆயினும், அந்த வேளையில் காரிருளில் ஒரு மின்னல் கீற்றுப்போல, என்னுடைய அப்பாதான் எனக்கு ஆக்கமும் ஊக்கமும் ஆறுதலும் அளித்து என்னைத் தேற்றி, எழுப்பி விட்டார். கூடவே அக்கா, தங்கை ஆகியோரின் அரவணைப்பும் இருந்தது.

உயர்கல்வி முடித்த பின்னர், பொருளாதாரப் பிரச்சினையின் நிமித்தமாக வேலைக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பிடித்த வேலை இல்லாவிட்டாலும், கிடைத்த வேலையைச் செய்யலாம் என முடிவெடுத்து சிறுசிறு வேலைகள் செய்து வந்திருந்தேன். அப்போது, எனது ஊரைச் சேர்ந்த நண்பி தர்சிகா, பயிற்சியுடன் வேலைக்கு ஆட்கள் எடுப்பதாக கூறினார்.

அவரின் ஆலோசனையைக் கேட்டு, அந்த வேலைக்குச் சென்றிருந்தேன். அங்கு என்னைப்போல, அநேகம் பிள்ளைகள் வந்திருந்தனர். பாதிப்பேர், சிங்கள மொழி பேசுபவர்களாக இருந்தனர். அங்கு பாடசாலை ஆசிரியர்கள் போல் இருவர் இருந்து, அங்கு வந்த பிள்ளைகளுக்கு ஏதோ சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தனர். என்னைப் பயிற்சியில் இணைக்கவில்லை.

இரண்டு நாள்களாக வேடிக்கை பார்த்தவாறே இருந்தேன். இரண்டு நாள்கள் கழிந்தது; அப்போதுதான், நான் ஒரு நாடகக் குழுவில் இணைக்கப்பட்டுள்ளேன் என்று தெரிந்தது. அதன் பின்னர், அங்கு நடந்த ஒவ்வொரு பயிற்சியும் செயற்பாடுகளும் என்னை ஆழமாகத் தொட்டன. இதன் விளைவாகத்தான் நான் இன்று வரைக்கும், விவாத நாடக ஆற்றுகையாளராகப் பயணித்துக் கொண்டிருக்கின்றேன். நான் இந்த நிலைமைக்கு வருவதற்கு காரண கர்த்தாக்களாய், ‘அக்ற்4’ (ACT4) கலைக் கூடத்தின் நலிந்த பிரேமரத்தினவும் பூபாலசிங்கம் பிரதீபனும் இருந்தார்கள்.

நான் தயாரித்த நாடகத்தை, எனது கிராமத்திலேயே அரங்கேற்றினார்கள். அது ஒரு புறம் மகிழ்ச்சியாகவும் இன்னொரு புறம் இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டு அதற்குப் பிறகு என்னவாவது சொல்லி விடுவார்களோ என்று பயமாகவும் இருந்தது.

ஆனால், அன்று எனது முதல் தயாரிப்புக்குக் கிடைத்த வரவேற்பும் ஊக்கப்படுத்தலும் என்னை இன்னும் உற்சாகப்படுத்தி, நம்பிக்கை துளிர் விடச் செய்தன. இனி இந்த அணியை விட்டு விலகிச் செல்வதில்லை என மனதில் உறுதிபூண்டேன்.

இந்தக் கலை அணியை, ஓர் உறவுள்ள குடும்பமாகப் பார்க்கின்றேன். இலங்கையில் தமிழ், சிங்கள மொழி பேசும் எல்லா இடங்களிலும் கிட்டத்தட்ட ஆயிரம் நாடகங்களை அரங்கேற்றியிருப்பேன். அது கருத்தாழமிக்க அனுபவங்களை எனக்குத் தந்திருக்கிறது.

நான், அதுவரை எண்ணியிருந்த எண்ணங்களைச் சீர் செய்ய, இந்த மாறுபட்ட கலைப் பயணம் எனக்கு உதவியது. இலங்கையின் வடபகுதி மாத்திரம்தான் பாதிப்பைச் சந்தித்திருக்கிறது என்ற எனது கடந்த கால மனப்பதிவு, எனது கலைப்பயணத்தின்போது சீர் செய்யப்பட்டிருக்கிறது.

நாடகங்களை அரங்கேற்றி முடிந்தவுடன், பலர் ஓடி வந்து கட்டிப் பிடித்து அழுவார்கள். அப்பொழுதுதான் அவர்களது துயரம் என்னையும் நான் நினைத்திருக்கும் பாதிப்பு சம்பந்தமான கணிப்பீடுகளையும் விட அதிகமானது என்பதை உணர முடிந்திருக்கிறது.

இதற்கு முன்னர் இது என்ன வாழ்க்கை, ‘அம்மா இல்லை; இனி எல்லாம் எதற்கு’ என்ற விரக்தி மன நிலையில் இருந்தது. வாழ்க்கையின் அந்தத்துக்கே சென்ற நான், தற்கொலைக்குக் கூட மூன்று தடவைகள் முயற்சி செய்து, அதிலிருந்தும் அதிர்ஷ்ட வசமாக காப்பாற்றப்பட்டுள்ளேன். கலை என் கண்ணீரை மாற்றியதோடு, மற்றவர்களின் வாழ்க்கையையும் மாற்ற வழி செய்திருக்கிறது.

நாடகம், மற்றவர்களின் துயர வாழ்க்கையையும் என் ஒட்டுமொத்தத் துயரங்களையும் மாற்றியமைத்து, நான் பயணித்த இருளடைந்த பாதைக்கு ஒளியூட்டியது. ஆக்கத்திறனுள்ள சிறந்தொரு படத் தயாரிப்பாளராக வரவேண்டும் என்பதுதான் என் கனவு.

மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுவதற்கான நிறைய வழிகள் இருக்கின்றன. அவற்றில் குறுந்திரைப்படம் என்ற ஒரு வழியை நான் தெரிவு செய்திருக்கின்றேன். மக்களுடைய தேவைகள், பிரச்சினைகளை இலக்குவைத்து ‘பாதிவழி’, ‘வதுவை’ ஆகிய இரண்டு குறுந்திரைப்படங்களைத் தயாரித்துள்ளேன்.

‘வதுவை’ குறுந்திரைப்படம், இந்தியாவின் தமிழ்நாட்டில் 2021 ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி நடைபெற்ற ‘அய்யன் பில்ம் அவோர்ட்ஸ்’ (Aiyan film Awards) விழாவில் ‘சிறந்த அறிமுக இயக்குநர்’ விருதைப் பெற்றதோடு, ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி நடைபெற்ற ‘பிலிப்பைன்ஸ் இன்டிபெண்டென்ற் பில்ம் பெஸ்டிவல்’ (*Philippines Independent Film Festival*) விழாவில் ‘பெண்கள் குறும்படத்தில் சிறந்த படம்’ என்ற விருதைப் பெற்றது. அதே ஆண்டு, நவம்பர் மாதம் 15ஆம் திகதி சிங்கப்பூர் இன்டிபெண்டென்ற் பில்ம் பெஸ்டிவல் (*Singapore independent Film Festival*) விழாவில் ‘சிறந்த சமூக விழிப்புணர்வு குறும்படம்’ என்ற விருதையும் டிசெம்பர் ஏழாம் திகதி இந்தியாவில் கோல்டன் லீப் இன்ரநெஷனல் பில்ம் பெஸ்டிவல் (*Golden Leaf International Film Festival*) விழாவில் சிறந்த நடிகை, நடிகருக்கான விருதையும் பெற்றுக் கொண்டது. மேலும், 12.01.2022 கொழும்பு இன்டிபெண்டென்ற் பில்ம் பெஸ்டிவல் (*Colombo Independent Film Festival*) விழாவில் சிறந்த இயக்குநருக்கான விருதையும் பெற்றுக் கொண்டுள்ளது.

நான் விவாத நாடக ஆற்றுகையாளராகவும் எனக்கு பொருத்தமான சமூகசேவை நிறுவனங்களிலும் சுதந்திரமாகப் பணியாற்றுகின்றேன். ஆயுத முரண்பாடுகளுக்குள் வாழ்ந்த எல்லோருமே, ஏதோ ஒருவகையில் பாதிக்கப்பட்டவர்கள். அதை அனுபவித்துக் கொண்டிருப்பவள் என்றவகையில் சொல்கின்றேன். என் தாய், சகோதரம், நான் நேசித்த உறவுகள் எல்லோரையும் இழந்து நிற்கின்றேன். எல்லோருக்கும் காயங்கள் மாறியிருக்கும். ஆனால் மனவடு என்பது மாறாத ஒன்று. இருந்தபோதிலும் எங்களுடைய வாழ்க்கையை ஏதோ ஒருவகையில் சரியான முறையில் வாழ்ந்து முடிக்க வேண்டிய காலத்தின் கட்டாயம் உண்டு. நாங்கள் மனித நேயம் இழந்து நம்பிக்கையற்ற தன்மையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். நல்ல மனிதர்களாய் மாறும்போது நல்ல சமுதாயம் கட்டியெழுப்பப்படும் என்றார்.



---


## வெள்ளிக்கிழமை முதல்

# லயனல் வெண்டில் ‘மின்னல்’



இலங்கையின் பண்டைய வரலாற்றுக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு, கற்பனை கதாபாத்திரங்களாலும் மற்றும் இடங்களிலும் காட்சியமைக்கப்பட்டு, சமகால அரசியலையும் பொருளாதாரத்தையும் மற்றும் உலகின் உண்மைத் தன்மைகளையும் தழுவி எழுதப்பட்டுள்ளது ‘அகுன’ (மின்னல்) என்ற நாடகம்.

இலங்கையின் நாடக வரலாறு, பல்வேறு விதமான நாடக வகைகளை கடந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ்வகையில், முற்றிலும் மாறுபட்ட நவீன காலத்துக்கு ஏற்ற வகையில் அமைந்த நவீன இசை நாடகமாக அரங்கேற இருக்கும் அசல் இசை நாடகமாக ‘அகுன’ (மின்னல்) திகழவுள்ளது.



முற்றிலும் மின்மயமாக்கப்பட்ட ‘அகுன’ (மின்னல்) மும்மொழிகளிலும் தயாராகி உள்ளது. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளின் கலவையாகத் தயாராகியுள்ள இந்நாடகம், கலா கீர்த்தி லக்ஷ்மன் டி சில்வாவால் இயக்கப்பட்டு மார்ச் மாதம் வெள்ளிக்கிழமை (11) மாலை 07 மணி, சனிக்கிழமை (12) பிற்பகல் 03 மணி, ஞாயிற்றுக்கிழமை (13) பிற்பகல் 03 மணி ஆகிய தினங்களிலும் காட்சிநேரங்களிலும் கொழும்பு, லயனல் வெண்ட் அரங்கில் அரங்கேற்றப்படவுள்ளது. நுழைவுச் சீட்டுகளை மார்ச் முதலாம் திகதி முதல், லயனல் வெண்ட் அரங்கில் பெற்றுக்கொள்ளலாம். நுழைவுச் சீட்டுகளை முன்பதிவு செய்து, நல்லதோர் நாடக அனுபவத்தை காணத்தவறாதீர்கள்.

ஜெரோம் லக்ஷ்மன் டி சில்வா, ஆங்கில நாடக ரசிகர்களுக்கு புதியவரல்ல. ‘அகுன’ (மின்னல்) நாடகத்தின் பின்னர், அவர், சிங்களம் மற்றும் தமிழ் நாடக இரசிகர்களுக்கு மிகநெருக்கமாக அறிமுகமாவது தவிர்க்க முடியாததொன்றாகும்.

‘அகுன’ (மின்னல்) ஆரம்பிக்கப்பட்ட விதம், நம்மிடையே சற்று ஆச்சரியத்தை உண்டு பண்ணும். லயனல் வெண்ட் வொர்க்ஷாப் பிளேயர்ஸ் நாடக பயிற்சி முகாம் ஒன்றில் நடத்தப்பட்ட ‘பிரெய் ஸ்ட்ரோமிங்’ என்ற பயிற்சியின் மூலமாக, கலைஞர்கள் எல்லோரும் அவர்களின் கருத்துகளின் மூலத்தை மையமாக வைத்து தோன்றியதே இந்த நாடகமாகும்.

ஏறக்குறைய 60 க்கும் மேற்பட்ட லயனல் வெண்ட் கலைஞர்களின் அயராத உழைப்பாலும் பயிற்சியாலும் ‘அகுன’ (மின்னல்) உருவாகியது. கோவிட்-19 பெருந் தோற்றுப் பரவல் காலங்களிலும் கூட, ஒளி உரு கலந்துரையாடல் மூலம் வசனங்கள், பாடல்களை பயிற்சி செய்து, நாடகத்தை மிகத் தரமானதாக உருவாக்கியுள்ளார்கள்.

கதை, எழுத்து ஜெரோம் டி சில்வா மற்றும் மகேஷ் விக்கிரமசிங்க. இசை அமைப்பாளர்கள் அமில விஜயரத்ன மற்றும் பிரபோத புத்திபிரிய. நடன அமைப்பு ஜெரோம் டி சில்வா. இணை நடன அமைப்பாளர் இந்திக்க லக்மால் ஆகியோராவர்.

(படங்கள்: கலாகீர்த்தி லக்ஸ்மன் டி சில்வா – நாடக காட்சிகள்)



# ‘காக்கை நிறச் சேலை’



கடந்த மூன்று தசாப்தங்களாக இலக்கியத்துக்காகத் தன்னை அர்ப்பணித்துவருபவர் கவிஞர் கதீர். ‘மஞ்சரி’, ‘பூவிழி’ ஆகிய சஞ்சிகைகளில் ஆரம்பித்து, முகநூல் வரையில் தனது பல்வேறு படைப்புகளைத் தந்த இவர், இடைப்பட்ட காலத்தில் ‘மணல்நதி’ எனும் கவிதைத் தொகுதியைப் பிரசவித்திருந்தார். இத்தனை காலமும் கவிதையினூடாக தான் கொண்டிருந்த புலமையை உலகறியச்செய்த கதீர், ஞாயிற்றுக்கிழமை (27) ‘காக்கை நிறச் சேலை’ எனும் சிறுகதைகள்அடங்கிய நூலை வெளியிட்டுள்ளார்.

கவிஞரும் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் அஸாத் எம் ஹனீபாவின் தலைமையில், ‘காக்கைநிறச் சேலை’ நூல்வெளியீட்டு நிகழ்வு, சாய்ந்தமருது லீமெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

கவிஞர் விஜிலியின் அரங்கழைப்புடன் ஆரம்பித்த இந்நிகழ்வின் வரவேற்புரையை பல்துறை எழுத்தாளர் ஏ.எம். பறக்கத்துள்ளாஹ்வும் நூல்பற்றிய விமர்சனங்களை ரியாஸ் குரானா, டணிஸ்கரன், கே.எல். நப்லா, மு.மு.மு. பாசில், ஏ.எம். சாஜித் அஹமட், சிராஜ் மசூர் ஆகியோர் வழங்கினர். நூலின் முதற் பிரதியை நூலாசிரியரின் மனைவி சர்ஜானா பெற்றுக் கொண்டார். ஜீவமணியின் முகப்பு வடிவமைப்புடன் கூடிய இந்நூல், அநுசரி வெளியீட்டகத்தின் வெளியீடாக அமைந்திருந்தது.

(படங்களும் தகவலும்: நூருள் ஹுதா உமர்)



# ஈஸ்வரா நாட்டியாஞ்சலி 2022

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம் கிழக்குப் பல்கலைக்கழக நடன, நாடகத்துறை, இந்துமா மன்றம் இணைந்து சிவராத்திரியை ஒட்டி வழங்கிய ‘ஈஸ்வரா நாட்டியாஞ்சலி 2022’ நிகழ்வு, செவ்வாய்க்கிழமை (01) சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக இராசதுரை அரங்கில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த நிகழ்வுக்கு மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் புளோரன்ஸ் திருமதி பாரதி கெனடி விசேட அதிதியாகவும் மட்டக்களப்பு சைவ மங்கையர் கழக தலைவியும் ஓய்வு நிலை அதிபருமான திலகவதி ஹரிதாஸ் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டிருந்தனர்.


அதிதிகள் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து, மங்கள விளக்கேற்றல், இறைவணக்கத்துடன் ‘ஈஸ்வரா நாட்டியாஞ்சலி 2022’ நிகழ்வின் பிரதான அரங்க ஆற்றுகை நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அதிதிகளின் விசேட உரையைத் தொடர்ந்து, அதிதிகள் அனைவரையும் விழா ஏற்பாட்டுக் குழுவினர், பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(படமும் தகவலும்: எம். எஸ். எம் நூர்தீன்)



# ‘சிறகு முளைத்த மீன்’ கவிதை நூல்





எழுத்தாளரும் கவிதாயினியுமான ஏறாவூரைச் சேர்ந்த டொக்டர் ஜலீலா முஸம்மில் எழுதிய ‘சிறகு முளைத்த மீன்’ எனும் கவிதைத் தொகுதி, ஞாயிற்றுக்கிழமை (27), எழிலினிப் பதிப்பகத்தால் சென்னைப் புத்தகக் கண்காட்சியில் (YMCA, NANDANAM) வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நூலை, தமிழ் நாடு அரசு மாநில திட்டக் குழு உறுப்பினர், தமிழிசை நடனக் கலைஞர் முனைவர் பத்மசிறீ கலைமாமணி நர்த்தகி நடராஜ் வெளியிட்டு வைத்ததுடன், நூலின் முதல் பிரதியை முனைவர் கவிஞர் கூடல் தாரிக் பெற்றுக்கொண்டார். அத்தோடு, பேராசிரியரும் பிரபல பேச்சாளருமான முனைவர் பர்வீன் சுல்தானாவும் விழாவை அலங்கரித்திருந்தார்.

டொக்டர் ஜலீலா முஸம்மில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில், கடமையாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(படங்களும் தகவலும்: எம்.எஸ்.எம். ஸாகிர்)



# முன்பள்ளி மழலையரின் கலை விழா

ஞாயிற்றுக்கிழமை (27), காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் நடைபெற்ற முன்பள்ளி மழலையரின் கலை விழாவின் காட்சிகள்...

(படங்களும் தகவலும்: சபா தனுஜன்)

# ‘புத்திகெட்ட மனிதர் எல்லாம்’



‘புத்திகெட்ட மனிதர் எல்லாம்’ திரைப்படத்தில் பணியாற்றிவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் PKM படக்குழுவினரின் நன்றி கூறும் நிகழ்வும், புதன்கிழமை (02) யாழ். திவ்யமஹால் மண்டபத்தில் நடைபெற்றது.

படத் தயாரிப்பில் பணியாற்றியவர்களுக்கான கௌரவிப்புகளும் பட உருவாக்கத்துக்கு உறுதுணையாக செயற்பட்டவர்கள், ஆதரவு அளித்தவர்களுக்கு நினைவு பரிசில்கள் வழங்கி நன்றி கூறப்பட்டது.

2021ஆம் ஆண்டின் இறுதியில் ராஜ் சிவராஜ் இயக்கத்தில் வெளியான ‘புத்திகெட்ட மனிதர் எல்லாம்’ திரைப்படம் வசூல் ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது.

‘புத்திகெட்ட மனிதர் எல்லாம்’ திரைப்படத்துக்கு 13 ஆவது நோர்வே தமிழ்த் திரைப்பட விழாவில் நான்கு விருதுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. சிறந்த நடிகை-சிந்துஜா, சிறந்த ஒளிப்பதிவாளர்-தர்மலிங்கம், சிறந்த இசையமைப்பாளர்-பூவன் மதீசன், சிறந்த திரைக்கதை-சிவராஜ் ஆகிய விருதுகள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படங்களும் தகவலும்: எம். றொசாந்த்)

# கிழக்கு மாகாண இலக்கிய விழா

எம்.எஸ்.எம். ஹனீபா

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான மாகாண இலக்கிய போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ். நவநீதன் அறிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு பிரசுரமான சிறந்த நூல்கள், குறும்திரைப்படங்கள் ஆகியவற்றைத் தேர்வு செய்யும் வண்ணம், கிழக்கு மாகாண எழுத்தாளர்களும் பதிப்பாளர்களும் தயாரிப்பாளர்களும் தமது படைப்புகளைச் சமர்ப்பிக்க முடிமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் ஆகக்குறைந்தது ஐந்து வருடங்களை நிரந்தர வதிவிடமாக கொண்ட இலக்கிய கர்த்தாக்கள், கலைஞர்கள், துறைசார் வல்லுநர்கள் இவ்விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

01.01.2021ஆம் திகதி தொடக்கம் 31.12.2021ஆம் திகதி வரை, கிழக்கு மாகாண படைப்பாளிகளால் வெளியீடு செய்யப்பட்ட நூல்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. மேலதிக தகவல்களுக்கு தாம் வசிக்கும் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தருடன் அல்லது பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 026 - 2220036, 066 - 2220076 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.



# ‘பேரன்பின் படிமங்கள்’

‘அன்பின் பாதை சமூகத்தின்’, எண்ணம் போல் வாழ்க்கை, கலை இலக்கிய மன்றம் நடத்திய கவிஞர் வேலணையூர் ரஜிந்தனின் ‘பேரன்பின் படிமங்கள்’ கவிதை நூல் அறிமுக விழா, திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கல்யாண மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக கலந்துகொண்ட திருகோணமலை உயர் தொழில்நுட்பக் கல்லூரி சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர் தங்கராசா ஜீவகன், திருகோணமலை பத்திரகாளி அம்மன் கோவில் ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள் ஆகியோர் முதற்பிரதி பெற்று ஆசி வழங்கினர். நூல் நயவுரையை கவிஞர் ஷெல்லிதாசன், கவிதாயினி பானு சுதாகரன் ஆகியோர் வழங்கினர்.

**“முதன்மை விருந்தினர்களாக கலந்துகொண்ட சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர் தங்கராசா ஜீவகன், பத்திரகாளி அம்மன் கோவில் ஆதீனகர்த்தா ரவிச்சந்திர குருக்கள் ஆசி வழங்கினர்**

(படமும் தகவலும்: எப். முபாரக்)

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 05 மார்ச் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.